ஜுலை.10 - ஜுலை.16, 2013

# சுடர் ஒளி

பக்கம் - 24

வாராந்த சஞ்சிகை

30/-



# ஜுலை எப்போதும் கறுப்புத்தான்!




பயங்கரவாதத்தின் இலங்கை முகம்!




சேடமிழுக்கும் '13'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த பயங்கரவாதத்தின்
# இலங்கை முகம்!

அக்கினிகுமாரன்

'ரைம்' சஞ்சிகை உலகப் புகழ் பெற்ற ஊடகம். உலக நடப்புக்களைத் தகுந்த ஆதாரங்களுடன் மின் வைத்து அவற்றின் நியாய அநியாயங்களை விமர்சனம் செய்வதில் அது முன்னனிப் பாத்திரம் வகித்து வருகின்றது.

இது அண்மையில் பௌத்த பயங்கரவாதத்தின் முகம் என்றொரு கட்டுரையை வெளியிட்டது. மியன்மாரில் முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் படுகொலைகளுக்கும், வன்முறைகளுக்கும் தலைமை தாங்கும் விராது என்ற பௌத்த பிக்குவின் படம் அட்டைப்படத்தில் பௌத்த பயங்கரவாதத்தின் முகம் என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டது. அது தொடர்பான கட்டுரையும் முஸ்லிம் மேல் இழைக்கப்டும் அநீதிகளை அம்பலப்படுத்தியிருந்தது.

இந்த விராது தன்னைப் பௌத்தர்களின் பில்லேடன் எனப் பெருமையுடன் சொல்லிக்கொள்வதுண்டு. ஏறக்குறைய அரை நூற்றாண்டின் பின்பு இப்போது தான் மியன்மாரில் தனியார் பத்திரிகைகளுக்கு ஊடாக சுதந்திரம் வழங்கப்பட்டது.

எனினும் பௌத்த பயங்கரவாதம் பற்றிய கட்டுரை வெளிவந்த 'ரைம்' சஞ்சிகை தடைசெய்யப்பட்டு விட்டது. இந்தப் பௌத்த பயங்கரவாதப் பிக்கு மியன்மாரில் அரசாங்கத்திற்கு மட்டுமன்றி எதிர்கட்சிக்கும் செல்லப் பிள்ளை. இவர் தலைமையிலான குழுவினர் பொலிஸார் முன்பே முஸ்லிம்களைக் கொலை செய்யும் உரிமைபெற்றவர்கள். பகிரங்க இடங்களில் வைத்தே முஸ்லிம் பெண்களைப் பாலியல் கொடுமைகளுக்கு உட்படுத்தத் தயங்காதவர்கள் இவர்கள். முஸ்லிம்களின் வீடுகளையும், கடைகளையும் இவர்கள் தீயிட்டு எரித்து விட்டு முஸ்லிம் சிறுவர், சிறுமியரை தீயில் வீசியெறிவதுண்டு.

இவர்களின் வீரதீர சாகசங்கள் காரணமாக பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து பங்களாதேஸ் நாட்டில் குடியேறியுள்ளனர். இப்படிப் பிரசித்தி பெற்ற பௌத்த பயங்கரவாதியின் முகத்தை அட்டைப்படத்தில் போட்டுக் கட்டுரை எழுதியமைக்காகவே 'ரைம்' சஞ்சிகை தடை செய்யப்பட்டது.


அது மியன்மாரில்! 'ரைம்' சஞ்சிகையின் அதே இதழ் இலங்கையிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

மியன்மாரில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபடும் ஒருவகைப் பயங்கரவாதியாகச் சித்தரித்து அட்டைப் படம் போட்டு வெளிவந்த ஒரு சஞ்சிகை. இலங்கையிலும் தடைசெய்யப்படுகின்றது என்றால் பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடும்.

எனினும் இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற வகையில் ஒரு பௌத்த மதகுரு அவமதிக்கப்பட்டதைக் கண்டித்தே இங்கும் அச்சஞ்சிகைக்குத் தடைவிதிக்கப்பட்டது எனக் காரணம் கூறப்படலாம்.

ஆனால் அதற்கும்அப்பாற்பட்ட அடிப்படைக்காரணங்கள் இருப்பதையும் எவரும் மறந்துவிட முடியாது. இலங்கையிலும் பௌத்த பயங்கரவாதத்தின் முகங்கள் பல உண்டு. இங்கும் பௌத்த பின்லேடன்களுக்குப் குறைவில்லை.

> **ஜாதிகஹெல உறுமய, பொதுபலசேன, இராவணா அமைப்பு எனப் பல்வேறு முகங்கள் பௌத்த அங்கிகளின் நின்று ஏனைய மதங்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன.**




ஜாதிகஹெல உறுமய, பொதுபலசேன, இராவணா அமைப்பு எனப் பல்வேறு முகங்கள் பௌத்த அங்கிகளின் நின்று ஏனைய மதங்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன.

பொதுபலசேன முஸ்லிம்கள் கிறீஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகளில் முன்னின்று செயற்பட்டு வருகின்றது. இலங்கையின் உச்ச அதிகாரம் கொண்ட பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆசி பெற்ற அமைப்பு பொதுபலசேன. அவர் தென்னிலங்கையில் பொதுபலசேனவின் காரியாலயத்தைத் திறந்துவைத்ததன் மூலம் அதற்கான தனது ஆதரவைப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்திருக்கிறார்.

அதனால்தான்போலும் பொதுபலசேன பொலிஸார் முன்னிலையில் வன்முறைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் தடுப்பதுமில்லை. சட்ட நடவடிக்கை எடுப்பதுமில்லை. அப்படி தவிர்க்க முடியாமல் வழக்குத் தொடுக்கப்படும் நிலை ஏற்பட்டால் முறைப்பாட்டாளர்கள் வழக்கை வாபஸ் வாங்கும் நிலை உருவாகிவிடும்.

இதுவரை இலங்கையில் அனுராதபுரத்தில் ஆரம்பித்து மல்வத்தை வரை 15க்கு மேற்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டு உடைக்கப்பட்டன. இந்த வன்முறைகளுக்கு நேரடியாக மஞ்சள் அங்கி அணிந்தபுத்த பிக்குகளே தலைமை தாங்கினர்.

கிறீஸ்தவ தேவாலயங்கள் பல தாக்கப்பட்டன. கொழும்புப் புறநகர் பகுதியில் அமைந்துள்ள கிறீஸ்தவ கல்வாரி ஆலயம் தொழுகை நடக்கும் போதே தாக்கப்பட்டது. அதன் போதகர் பொதுபலசேனாவின் தலைமைப்பதவி வகிக்கும் ஞானசாரதேரரால் வயிற்றில் காலால் உதைக்கப்பட்டார்.

கிறீஸ்தவ மதகுருவைக் காலால் உதைத்த இவருக்கு பௌத்த தர்மத்தைக் காலால் உதைக்கும் பெருமையும் உண்டு.ஆம்! மதுபோதையில் வாகனம் ஓட்டிய குற்றம் தொடர்பாக ஏற்கவேன இவர் மீது வழக்கு உண்டு.

இவர் மட்டும் தான் சட்ட மீறல்களில் துணிந்து இறங்கும் மஞ்சள் வன்முறையாளன் எனக்கூறி விடமுடியாது. இன்னும் நிறையப்பேர் உண்டு.

இறைச்சிக்காக மாடு வெட்டப்படுவது நிறுத்தப்படவேண்டும் எனக்கோரி 'வெசாக்' தினத்தில் தீக்குளித்தார் ஒரு பிக்கு. இவர் ஏற்கனவே பிரதேசசபை உறுப்பினராக இருந்த போது மின்சார சபையில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறிப் பணமோசடி செய்தவர். முற்றும் துறந்த துறவியின் லஞ்ச லாவண்யம் இது. எனினும் இக்குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் சமூகமளித்தமைக்காக நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

அவரின் சடலத்தைப் பொறுப்பேற்பதில் கூட பொதுபலசேனவுக்கு இன்னுமொரு பிக்குகள் குழுவுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் சிலர் காயம்.

முஸ்லிம்கள், கிறீஸ்தவர்கள் மேல் பாயும் வன்முறைகள் இடையிடையே தங்களுக்குள்ளும் பிரயோகிக்கப்படும். பாலியல் வல்லுறவு, சிறுவர் துஸ்பிரயோகம், சட்டவிரோத புதையல் அகழ்வு, தொல்பொருட்களை களவாடல், மதுபோதையில் நடனமாடுதல் எனப் புத்த பிக்குகள் பலரின் குற்றப்பட்டியல் மிக நீளமானது.

ஆனால் இக் குற்றங்களுக்காக எந்த ஒரு பௌத்த பிக்குவும் தண்டிக்கப்பட்டதாக தகவல்கள் இல்லை. இப்படியாகச் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டும் இவர்களுக்கு ஏனைய மதங்கள் மீதான வன்முறைகள் சாதாரணமானவை.

எனவே தான் பள்ளிவாசல் இடிப்புக்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் உடைப்புக்கள் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் எரிப்புக்கள், தனியார் காணிகளிலும் பொது இடங்களிலும் புத்தர் சிலைகளை நிறுவுதல், இந்துக் கோவில்களின் மிருகபலி போன்ற வழிபாட்டு முறைகளில் தலையிடுதல் போன்ற பௌத்த பயங்கரவாதம் இலங்கையிலும் தங்குதடையின்றி கொடிகட்டிப் பறக்கிறது.

புத்த பிக்குகளின் கையில் விசிறி இருப்பது நுண்ணுயிர்கள் அவர்களின் மூச்சுக்காற்றில் கலந்து அழிந்துவிடாமல் விசிறி விலக்குவதற்காகவே அது கௌமத புத்தரின் ஜீவகாருண்யம். ஆனால் இந்த வன்முறை அமைப்புக்களின் புத்தபிக்குகளின் மூச்சுக்காற்றில் மனிதகுல தர்மமே எரிந்து சாம்பலாகின்றது. ரொஹிங்கா முஸ்லிம்களுக்கு எதிராக மியன்மாரில் முன்னெடுக்கப்படும் பயங்கரவாதத்தின் முகம் 'ரைம்' சஞ்சிகையில்! இலங்கையில் ஏனைய மதங்களுக்கு எதிரான பயங்கரவாத முகத்துக்கு ஏராளமான சஞ்சிகைகள் தேவை. அந்த 'ரைம்' சஞ்சிகையே தடைசெய்யப்பட்டதன் மூலம் இலங்கை அரசு தனது பௌத்த பயங்கரவாதத்திற்கான விசுவாசத்தைப் பிரகடனம் செய்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு தேர்தலில்தான்!



**-நீலன்**

தமிழ் மக்களைப் பொறுத் தளவில் அவர்களுக்குக் காணி, பொலிஸ் அதிகாரம் மற்றும் சுகாதாரம், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றினைத் தங்களைக் தாங்களே நிர்வகிக்கக் கூடிய அலகுடன் கூடிய அதிகாரமே அவசியம் தேவையாகவுள்ளது.

இவ்வாறனதோர் தீர்வினை நிராகரித்து நடந்து கொள்கின்றனர்.

புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள திருத்தமானது மத்திய மன்றம் மாகாண சபைகளைப் புறக்கணிக்க மிகவும் எளிதாக்குகின்ற நிலையில் இதனால் வடக்கு கிழக்கு மக்களே வெகுவாகப் பாதிக்கப்படுவர். தற்போது மாகாண சபைப் பட்டியலில் உள்ள ஏதாவது விடயம் குறித்து விதியொன்றினை மத்தியமன்றம் நிறைவேற்ற

இவ்வாறு இனவாதத்தினைத் தூண்டுகின்ற கருத்துக்கள் பிரதிபலிக்க ஆரம்பித்துள்ளமையானது நாட்டில் நல்லிணக்கத்திற்கான சர்ந்தப்பம் இல்லையா? என்ற கேள்வியை எழுப்புவதாகவுள்ளது.

1987 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அதுவும் 26 வருடங்களிற்குப் பின்பு

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் கிட்டியிருக்குமாயின் நாடு எதிர்கொண்ட அவலங்களைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இலங்கை எதிர்கொண்ட மோதல்கள், அழிவுகள் என சகலதும் ஏற்படாதிருக்கும். அது மட்டுமல்லாது பொருளாதார ரீதியில் சிங்கப்பூரினைக் காட்டிலும் இலங்கை வளர்ச்சிப் படியினை எட்டியிருக்கும். பிராந்தியத்திலும் முன்னிலையான நாடுகளின் வரிசையில் இலங்கை இருந்திருக்கும்.

போரின்பின்னரான நிலையில், தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதற்கு அப்பால் மீள்குடியேற்றம், இயல்புவாழ்க்கை எனப் பல பிரச்சினைகள் உள்ளன. பல தேவைகளும் உள்ளன.

இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்பட வேண்டிய அதே வேளை, நிலைத்திருக்க கூடிய அபிவிருத்திக்கும் மக்கள் நலனுக்குமான இனப்பிரச்சினைத் தீர்வு என்பது மிகமிக அவசியமானதாகவுள்ளது.

தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம், ஆயுதவழியில் இருந்து தற்போது ஜனநாயக வழிமுறைக்கு மாற்றம் கண்டுள்ள போதும், தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு சரியான தீர்வொன்றினை முன்வைக்க வேண்டும் என்ற கருத்துக்கள் சரியான வகையில் எழவில்லை.

ஆயுதப்போராட்டம் நடைபெற்ற காலத்தில் தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைத்தீர்வு பற்றி பார்வையினைச் செலுத்தியவர்கள் கூட இன்று வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர் அல்லது தீர்வொன்று தேவை என்பதை விரும்பின் சட்ட மூலம் அனைத்து மாகாணசபைகளுக்கும், தமது கருத்துக்களை முன்வைக்கவென அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இந்நிலையில் அனைத்து மாகாண சபைகளும் ஏற்றுக் கொண்டால் சட்ட மூலம் சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றப்படலாம்.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணசபைகள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஏற்றுக் கொள்ளாத சபைகளுக்குச் சட்டத்தைப் பொருத்தமானதாக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவைப்படும். ஆனால், பெரும்பான்மையால் மட்டுமே சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாகாணசபைகளுக்கு பொருந்துவதாய் அமையும்.

உத்தேச திருத்தச் சட்டத்தின் பிரகாரம், பெரும்பான்மையான மாகாணசபைகள் இணங்கினால் அச்சட்டம் அனைத்து மாகாணங்களுக்கும் பொருந்தும் எனக்கூறுகின்றது. இது எதிர்க்கட்சியின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மாகாணசபைகளிற்கு மத்திய சபையின் சட்டங்களை இலகுவில் திணிக்கக் கூடியதாக அமைந்துவிடும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளே இதனால் அதிகம் பாதிக்கப்படுபவையாகக் காணப்படும்.

இந்நிலையில் தற்போது வடமாகாணசபைத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. இவ்வாறானதோர் நிலையில் சிங்கள இனவாதக்கட்சிகள் மற்றும் சில அமைச்சர்கள் இனவாதத்தினைத் தூண்டுகின்ற வகையில் 13ஆவது திருத்தத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அதன் அதிகாரங்களைக் குறைக்கவேண்டும் எனவும், அதனை முற்றாகவே ஒழிக்க வேண்டும் எனவும் கூட முனைப்புடன் இயங்க ஆரம்பித்துள்ளனர்.

> **“ ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணசபைகள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஏற்றுக் கொள்ளாத சபைகளுக்கு சட்டத்தைப் பொருத்தமானதாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவைப்படும். ஆனால் பெரும்பான்மையால் மட்டுமே சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாகாண சபைகளுக்கு பொருந்துவதாய் அமையும்.**

வடக்கிற்கு என்று வரும் போது மட்டும் பெரும் சர்ச்சைக்குரியதாக அமைகின்றது. இது தமிழ்மக்களுக்குச் சில தெளிவான செய்திகளைத் தருவதாகவே பார்க்கமுடிகின்றது.

அதாவது குறைந்த அளவிலான அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபைகளிலாவது தமிழர்கள் ஆட்சியமைக்கும் நிலை அமையவோ, அதிகாரங்களைப் பகிரவோ மத்தியில் ஆட்சியில் உள்ளவர்கள் விரும்புகின்றனர் இல்லை என்பதையே காட்டுகின்றது. முக்கியமாக காணி, பொலிஸ் அதிகாரத்தினை மத்தியில் வைத்துக் கொண்டு தமிழ் மக்கள் எதற்காகப் போராடினார்களோ அதற்கான தீர்வுக்கான மேலும் முரண்பாட்டினை வளர்ப்பதற்கே எத்த்னிக்கின்றனர்.

உண்மையில் பதின்மூன்றாந் திருத்தத்தின் வாயிலாக கொண்டு வரப்படும் மாகாணசபைகள் தமிழ் மக்களுக்கான தீர்வல்ல. தமிழ் மக்கள் இணைந்த வடக்கு கிழக்கில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வொன்று அமையுமென்ற அபிலாஷையுடன் தமிழர்கள் உள்ளனர்.

நாம் எதற்கெதற்காகப் போராடினோமோ அவற்றை எல்லாம் மறக்க வைத்து இப்போது தமிழ்த் தலைமைகளையும், தமிழ் மக்களையும் திட்டமிட்டுத் திசைதிருப்பும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடுகின்றது என்பதை அரசியல் தலைவர்களும் மக்களும் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளனர்.

அடிப்படையிலேயே வடமாகாணசபையானது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வசமே செல்லும், இது தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு மேலும் பலமாக அமையும் என்ற தீர்க்கதரிசனத்துடன் தான் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைக் குறைக்கவேண்டும் எனப் பேரினவாதிகள் காய் நகர்த்துகின்றார்கள். இதனைப் புரிந்து கொண்டு தமிழ்மக்கள் தமக்கான தீர்ப் பினைத் தேர்தலில் தாமே எழுதவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவன்

# நவாலி நரபலி

## ஜூலை எப்போதும் கறுப்புத் தான் – 1



“ முள்ளிவாய்க்கால் மனிதப் படுகொலைக்கு ஒத்திகை பார்ப்பது போன்று 1995 ஜூலை 9ஆம் திகதி நவாலி செ‌ன். பீற்றர்ஸ் தேவாலய நரபலி நடந்தேறியது. சில நிமிட நேரப் பேரிரைச்சலால் வெடியோசையுடன் அதிர்ந்தது நவாலி. எங்குமே பிணவாடை. குற்றுயிராய்த் துடித்துக் கொண்டிருந்த பிஞ்சுகள், கைக் குழந்தைகள் ஏராளம். தேவாலயத்தின் நொருங்கிப் போன தூண்களிலெல்லாம் சதைத் துண்டங்கள். காயங்களின் வலியில் கத்திய பிஞ்சுகளின் அவலக் குரல்கள் வானதிரக் கேட்டன.

புலிகளின் போரால் பொதுமக்களைக் கொன்றொழிக்கும் நிகழ்வுகள் முள்ளிவாய்க்காலில் மட்டும் அரங்கேறவில்லை. போர் நீடித்த மூன்று தசாப்தங்களிலும் இதுவே வாடிக்கையாக இருந்து வந்துள்ளது. முள்ளிவாய்க்கால் மனிதப் படுகொலைக்கு ஒத்திகை பார்ப்பது போன்று 1995 ஜூலை 9ஆம் திகதி நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய நரபலி நடந்தேறியது.

எப்போதும் தமிழர்களுக்கு ஜூலை மாதம் துயரத்தின் அடையாளமாக கறுப்புப் படிந்த நாள்களையே பரிசாகத் தந்துள்ளது. அதே போன்ற ஒரு கறுப்பு ஞாயிறு விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுது. பலாலியில் இருந்தும் சண்டிலிப்பாய், அளவெட்டி பகுதிகளில் இருந்தும் ஊர்மனைகளை நோக்கி முன்னேறிப் பாய்ச்சல் என்ற பெயரோடு நகரத் தொடங்கியது இராணுவம். இந்த நடவடிக்கை மூலம் பலாலி, அளவெட்டி, சண்டிலிப்பாய் ஏற்கனவே மீட்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களிலிருந்தும் ஒரே நேரத்தில் பல களமுனைகளை திறப்பதன் ஊடாக புலிகளை பொறிக்குள் சிக்க வைத்து ஒரே வாரத்தில் ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்தையும் வழித்துத் துடைத்து சிங்கக் கொடி ஏற்றுவதே அப்போதைய பாதுகாப்புப் பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் நோக்காக இருந்தது. கவச வாகனங்களின் பாதுகாப்போடு படைகள் நகரத் தொடங்கின.

படைகளின் வசதிக்காக வான்பரப்பில் புக்காரா, சியாமாச்செட்டி (பொம்மர்) விமானங்கள் குத்தி நிமிர்ந்து குண்டுகளை தள்ளி விட்டுப் போயின. ஆட்லறிகள் அகோரப் பசியோடு மனித உயிர் தேடி ஊரெங்கும் கூவிக் கொண்டு வீழ்ந்தன. தம்மை இலக்கு வைத்து தொடர்ந்து கொண்டிருந்த குண்டு வீச்சுக்களால் கையில் அகப்பட்ட பொருட்கள், உடுத்த உடுப்புகள், கைக்குழந்தைகளுடன் சங்குவேலி, கட்டுடை, மானிப்பாய், பிரதான வீதி, வட்டுக்கோட்டை, சங்கரத்தை, வழுக்கையாறு நவாலி வீதி, ஆனைக்கோட்டை நவாலி வீதி ஆகிய வீதிகள் ஊடாக கண்ணீரும் கம்பலையுமாக ‘சாரை சாரையாக’ மக்கள் இடம் பெயர்ந்தனர்.

ஆனால் சாவு இவர்களை விடுவதாகத் தெரியவில்லை. மக்கள் இடம் பெயர்ந்த வீதிகளை நோக்கி சீறிப் பாய்ந்தன ஆட்லறிக் குண்டுகள். ஹெலிகளில் இருந்து கலிபர் துப்பாக்கிகள் உமிழ்ந்த சன்னங்கள் வீதிக்கு வீதி மக்களின் உயிர்களை குடித்துக் கொண்டே இருந்தன. சிதறியோடிய மக்கள் கூட்டத்தை அரச வல்லூறுகள் விடவேயில்லை. உயிரிழந்த உடலங்களைக் கூட தூக்க முடியாத அவலம்.

குருதி கொப்பளிக்கும் காயங்களைச் சுமந்தபடி மக்கள் கூட்டம் தெருத் தெருவாய் பிணவாடை. எங்கும் அவலம் எழுதப்பட்ட விதியாகிறது. காயமடைந்தவர்கள் கூட சிகிச்சை கிடைக்காது குருதி வெளியேறி உயிரிழந்த துயரம். இந்த வலிகளோடு பசியும், தாகமும் நெஞ்சை அடைக்க நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தனர் மக்கள். ஒரு தொகுதியினர் சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் இன்னொரு தொகுதியினர் அதற்கருகிலுள்ள நவாலி கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்திருந்தனர். அகதிகளாய் காயங்களுடன் வந்தவர்களுக்கு கூட சிகிச்சை அளிக்க முடியாத துயரத்தில் வலிகாம வைத்தியசாலைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டிருந்தன. அம்புலன்ஸ் வசதிகளோ வாகன வசதிகளோ அவர்களுக்கு இருக்கவில்லை. காயத்தோடு இருந்தவர்கள் கண்முன்னே குருதிப் பெருக்கால் உயிரிழப்பதை கை கட்டி வேடிக்கை பார்க்கத் தான் அன்று முடிந்திருந்தது. கையில் கிடைத்த துணிகளும் மக்களின் பிளக்கப்பட்ட துளைக்கப்பட்ட காயங்களுக்கு மருந்திட உகந்ததாக இருக்கவில்லை. இவ்வாறு வலிகளைச் சுமந்தபடி இரு ஆலயங்களிலும் ஒதுங்கிய மக்களுக்கு கிடைத்ததை வைத்து சமாளிப்போம் என்ற உணர்வுடன் சில மருத்துவ பணியாளர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கான நிவாரண உதவிகள் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந் தனர் கிராம அலுவலர்களான செல்வி ஹேமலதா செல்வராஜா, பிலிப்புப்பிள்ளை பெரியாம்பிள்ளை ஆகிய இருவரும்.

நேரம் சரியாக பிற்பகல் 5.40 ஐ தொட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி நோக்கி வேகமாக பேரிரைச்சலுடன் வந்தது ‘புக்காரா’ ஒன்று. சில நிமிட நேரம் தேவாலயத்தையும் மக்கள் தங்கியிருந்த முருகன் ஆலயத்தையும் வட்டமிட்டபடியே இருந்தது. பதறியடித்த மக்களை கீழே படுத்து பாதுகாப்புத் தேடுமாறு பணித்தனர் கடமையிலிருந்த தொண்டர்களும், கிராம அலுவலர்களும்.

வட்டமிடலை சில நிமிடங்களுக்குள் முடித்துக்கொண்ட புக்காரா விமானம் ‘சர்ரென’ குத்தியது தேவாலயத்தை நோக்கி.

“ஆண்டவரே! எம்மைக் காப்பாற்றும்” மத பேதங்கள் இன்றி ஒரே தொனியில் ஓங்கி ஒலித்த பெருங்குரல்களை புக்காரா வீசிய குண்டுகள் மௌனிக்கச் செய்தன. சில நிமிட நேரப் பேரிரைச்சலால் வெடியோசையுடன் அதிர்ந்தது நவாலி. எங்குமே பிணவாடை. குற்றுயிராய்த் துடித்துக் கொண்டிருந்த பிஞ்சுகள், கைக்குழந்தைகள் ஏராளம். தேவாலயத்தின் நொருங்கிப்போன தூண்களிலெல்லாம் சதைத் துண்டங்கள். காயங்களின் வலியில் கத்திய பிஞ்சுகளின் அவலக் குரல்கள் வானதிரக் கேட்டன. ஆனால், வட்டமிட்டு குண்டு வீசிய வல்லூறுகளுக்கு மட்டும் அது கேட்கவேயில்லை. தங்கள் வேலையை முடித்த பெருமையுடன் அகன்று கொண்டன அரச வல்லூறுகள். தாய் தந்தையை குண்டுகளுக்கு பலி கொடுத்து விட்டு சடலங்களில் விழுந்து குழறினர் சிறுவர்கள். தம் பிஞ்சுகளின் குதறப்பட்ட சடலங்களை கட்டியணைத்தபடி கதறியழுத தாய்மார் ஏராளம், எல்லாமும் ஒரு நொடியில் நடந்து முடிந்தது. தேவாலயங்களில் ஒதுங்கியிருந்த மக்களுக்கு பணியாற்றவென அங்கு விரைந்து கடமையில் ஈடுபட்டிருந்த கிராம அலுவலர்களான செல்வி ஹேமலதா செல்வராஜா, பெரியாம்பிள்ளை ஆகியோரும் கட்டட இடிபாடுகளுக்குள் சிதறிப் போய் சடலமாகக் கிடந்தனர். அங்கு மக்களுக்கான மருத்துவ மற்றும் தொண்டு உதவிகளை செய்து கொண்டிருந்த 60 பணியாளர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் உயிரற்றுக் கிடந்தனர்.

கட்டட இடிபாடுகள் அகற்ற அகற்ற சடலங்களும், சதைகளுமே வெளிவந்தன. ஒரு வாரம் முடியவே உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை கணக்கிட முடிந்திருந்தது. அன்றைய நாள் மொத்தம் 147 பேரை பலியெடுத்தும் 360 பேரைக் காயப்படுத்தியும் இருந்தது. எனினும் தமது தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவிகள் என்பதை மறைத்து எல்லோருக்கும் புலிச் சாயம் பூசியது படைத் தரப்பு.

“யாழ்ப்பாணம் நவாலியில் உள்ள புலிகளின் ஆயுதத் தொழிற்சாலை நிர்மூலம்! முக்கிய தளபதிகள் உட்பட பலர் பலி!!” என்பதே அன்றைய அரச ஊடகங்களில் தலைப்புச் செய்தியை அலங்கரித்தன. ஆனாலும் நவாலியின் வலி இன்னும் வலிகாம மக்களிடம் அழியாத நினைவலைகளாக படிந்தேயிருக்கின்றது. 18 வருடங்களைக் கடந்தும் வலியின் ஒரு அணு கூட குறையவேயில்லை.

நரபலி நடத்திய புக்காரா சூடாறுவதற்கிடையில் புலிப் பாய்ச்சலில் வீழ்த்தப்பட்ட போதும் இன்னமும் நினைவின் துவாரங்களில் பெரும் வலியாய் கசிந்துகொண்டே இருக்கிறது நவாலிப் படுகொலை.

*** *** ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் அடங்காத் துயர்




அருண்மொழிவர்மன்

பிரதீஸுடன் நான் எப்போது நெருக்கமாக இருந்தேன் என்பது எனக்கு இன்றும் சரிவரத் தெரியவில்லை. எனது முதல் நண்பன் யாரென்று இப்போது இணையத் தளங்களில் கடவுச் சொல்லை ஞாபகப்படுத்தக் கேட்கும் போதெல்லாம் அவனது பேர் தான் ஞாபகம் வருகின்றது. ஆனால் எந்த காலப்பகுதியிலும் எனக்கு ஆக நெருக்கமான நண்பனாக அவன் இருந்ததில்லை.

அப்போது நாங்கள் நவாலியில் இருந்தோம். நவாலி மகாவித்தியாலயம் என்ற பள்ளிக் கூடத்தில் அப்போது இரண்டாம் வகுப்புப் படித்துவந்தேன். புதிய இடம். புதிய சூழல். எவருடனும் பெரிதாக நெருங்கிப் பழக முடியவில்லை. கொழும்பில் இருந்துவிட்டு வந்திருந்ததால் எனது பேச்சுத் தமிழ் கூட அவர்கள் பேசிய தமிழுடன் வேறுபட்டு இருந்திருக்கலாம். இதனால் பள்ளிக்கூடம் போவதே ஏதோ சிறைக்குப் போவதைப் போன்று இருந்தது. இந்த நாட்களில்த் தான் பிரதீஸ் அறிமுகம் ஆனான். ஏதோ அவனுடனும் துளசி என்ற இன்னொருவனிடமும் தான் கொஞ்சம் பழக ஆரம்பித்தேன்.

எப்போதும் அந்தப் பள்ளிக்கூட நண்பர்களை விட்டு விலகியே இருந்த என்னை அவன் மெல்ல மெல்ல பூமிக்கு இழுத்துவந்தான். ஒரு மழை நாளில் பள்ளிக்கூட ஆசிரியர்கள் வராமல் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது இரண்டு கற்களை எப்படி காந்தம் ஆக்குவது என்ற இரகசியத்தை எனக்கு மட்டும் சொல்லித் தந்தான். அந்த வயதிலேயே அவனுக்கு நிறைய விடயங்கள் தெரிந்திருந்தன. பூக்களை அவற்றின் காம்பைப் பிடித்து கிள்ளும்போது அவை விழும் விதத்தில் இருந்து ஆண் பூவா பெண் பூவா என்று கண்டறியும் வித்தையை ஒரு முறை எனக்கு பள்ளிக்கூடம் விட்டு வரும் போது பொறுமையாகச் சொல்லித் தந்தான்.

அப்போதெல்லாம் அவன் ஒரு சிறிய அளவிலான சூட் கேசில்தான் பள்ளிக்கூடத்துக்கு புத்தகம் கொண்டு வருவான். நானும் எனது அப்பாவிடம் அடம் பிடித்து அது மாதிரி ஒரு சூட்கேஸ் வாங்கிக்கொண்டேன். அவனது சொந்தக்காரர் யாரோ அவனுக்குக் கொடுத்த ஒரு தோடம் (orange) பழத்தின் அரைவாசிய அவன் எனக்குத் தந்தான். அதை ஒரு பேப்பரால் சுற்றி அந்தச் சூட்கேசில் வைத்திருந்தேன். சனி, ஞாயிறுகளில் வீட்டில் எடுத்து உண்டால் யார் தந்தது என்று கேட்பார்களோ என்று பயந்து அதை ஒளித்தே வைத்திருந்ததில் எனது புத்தகம் எல்லாம் தோடை வாசம் அடிக்கத் தொடங்கியது. இந்த நேரம் பார்த்து காந்தம், விளையாட்டுப் பொருட்களில் வரும் மோட்டார் சைக்கிள் பாகங்கள் என்று சேர்க்கும் ஆசையும் வந்தது. பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்ட போற வழியில் அரசடி சந்தி கடந்தவுடன் வரதனின் சைக்கிள் கடை வரும். கடைக்கு முன்னால இருந்த நிலத்தில் பழைய சைக்கிள் போல்ஸ், நட்டுகள் எல்லாம் எறிந்திருக்கும். நாங்கள் அதைப் பொறுக்கி சேர்ப்போம். என்னிலும் நிறைய உற்சாகமான பிரதீஸ் நிறைய சேர்த்து எனக்கும் பாதி தருவான். ஒரு முறை ஒரு பழைய விளையாட்டு ஹெலிகொப்டரை உடைத்து அதில் இருந்த காந்தத்தை இருவரும் பகிர்ந்து எடுத்தோம். எம்மிடம் இருந்த எல்லா இரும்பு உதிரிபாகங்களுக்கும் காந்தத்தை ஏற்றவேண்டும் என்பது எமது திட்டம்.

அப்போது நான் ஒரு மோதிரம் போட்டிருந்தேன். அடிக்கடி பிரதீஸ் அதை வாங்கி அணிந்து பார்ப்பான். ஒரு நாள் நான் அவனையே அதை வைத்திருக்கச் சொல்லிவிட்டேன். பிறகு இருவரும் வரதன் கடையைத் தாண்டி, ரோட்டோரத்தில் காயப்போட்டிருக்கிற எள்ளை எல்லாம் எடுத்து சாப்பிட்டபடி வீட்ட போனோம். கொஞ்ச நேரத்தால எங்கட வீட்ட பிரதீஸ் அவன்ட அம்மாவோட வந்து நிற்கிறான். ஏனோ தெரியேல்லை, அந்த மோதிரத்தை அவன் என்ட அம்மாவிடம் திருப்பிக் கொடுத்துவிட்டான். அதை பற்றி அவனிடம் அடுத்த நாள் கேட்கோணும் என்றிருந்தேன்.

இதற்குபிறகு சிறிது நாளில் அந்த ஆண்டும் முடிய நான் மிக சாதாரணமான புள்ளிகளையே பெற்றதால் என்னை சுதுமலையில் இருந்த எனது அப்பம்மாவீட்டிற்கு அனுப்பி அங்கு இருந்த பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். இப்படியே மெல்ல மெல்ல பிரதீஸ்டனான உறவு அப்போதைக்கு முடிவடைந்தது.

இதற்குப் பிறகு அவனுடன் மீண்டும் பழகத் தொடங்கியது 10 வருடம் கழித்து, நானும் அவனும் ஒரே ரியூஷனில் படிக்கும்போது. அவன் நிறைய வளர்ந்திருந்தான். பெரிதாக மீசை கூட வந்திருந்தது. நிறைய சதை போட்டிருந்தான். முன்பிருந்த நெருக்கம் தொலைந்து போயிருந்தாலும் அன்பாகக் கதைத்தான். ரியூஷன் முடிய அடிக்கடி ஒன்றாக வருவோம். நவாலியில் எம் இருவர் வீட்டிற்கும் நடுவில் இருந்த எனது கல்லூரித் தோழனும் அவனும் மிக நெருக்கமாகியிருந்தார்கள். சந்தோஷமாக நாட்கள் போய்க் கொண்டிருக்கும்போது, அந்த எனது கல்லூரி தோழனுக்கும் எனது தோழன் ஒருவனுக்கும் ஏதோ சில சிறுபிள்ளை கோபங்கள் வர நட்பு இரண்டு அணியாகப் பிரிந்தது. எனது நண்பன் பக்க நியாயங்களை ஏற்று நான் பிரதீஸுடனும் மற்ற நண்பனுடனும் கதைப்பதை தவிர்த்தேன். ஒரு நாள் ரியூஷன் முடிய நவாலி அரசடி சந்தியில் நாகேஸ் கடையில் பொறித்த வேர்க்கடலை வாங்கிக் கொறித்தபடி வீடு செல்லும்போது பிரதீஸும் மற்றைய நண்பனும் அருகில் வந்து எமக்கும் உனக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை, ஏன் நீ எம்மோட கதைக்கிறதில்லை என்று கேட்டனர். ஒன்றுமில்லை என்றுவிட்டு நான் என் பாட்டில் போய் விட்டேன். ஆனால் ஏனோ சின்ன வயது பிரதீஸின் ஞாபகங்கள் நிறைய வந்தன.

இதற்குப் பிறகு பிரதீஸை நான் சந்தித்தது ஜூலை 9, 95ல். முதல் நாள் யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டுப் போட்டியைப் பார்த்து அதில் சம்பியன் கிண்ணத்தைத் தவறவிட்ட நண்பன் அனுஷனுக்கு நானும் தயா என்ற நண்பனும் ஆறுதல் சொல்லிவிட்டு வீட்ட வர நேரமாகி விட்டது. விடிய ரியூஷனுக்கு போய்ட்டு வாறன். ஆமி முன்னேற அராலி பக்கத்தால முன்னேறுகிறான் என்று சனமும் இடம்பெயர வெளிக்கிட்டுது. ரேடியோ எல்லாம் ஏதோ 'முன்னேறிப் பாய்ச்சல்' என்று அலறுது. ரியூஷன் முடிஞ்சு போனா உயரப்புலம் பிள்ளையார் கோயில், மூத்த நாயனார் கோயில், சிதம்பர பிள்ளையார் கோயில் என்று எல்லா இடமும் இடம்பெயர்ந்த சனம். நவாலி 'சர்ச்' முன்னால் பெரிய கூட்டம். முன்னுக்கு இருந்த இந்து கோயிலிலும் நிறைய சனம். ஊரில் எனக்கு நன்கு தெரிந்த சனம். வேற நின்று உதவிசெய்து கொண்டிருந்தது. 'சர்ச்சுக்கு' முன்னால் பிரதீஸ் அவன் ஒன்றுவிட்ட தமக்கையுடன் நின்றான். அவ அப்ப ஊர் விதானை. அதால இடம்பெயர்ந்த சனத்தின் விபரங்களைத் திரட்டி அவர்களுக்கு உதவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தனர். நிறைய நாட்களின் பின்னர் அவனுடன் மனம் விட்டுக் கதைத்தேன். தூரத்தில் ஷெல் விழுந்து வெடிக்கும் ஓசைகள் கேட்கக் கேட்க அவனுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். சம்பந்தமேயில்லாமல் சின்ன வயசில் நான் கொடுத்த மோதிரம் பற்றிச் சொன்னேன். இதை இப்ப சொன்னால் பெடியள் பகிடி பண்ணுவாங்களடா என்று சிரித்தான். சில நாட்களின் முன்னர்தான் தனது தகப்பன் சவூதியில் இருந்து நீண்ட நாட்களின் பின்னர் ஊர் வந்திருப்பதாகச் சொன்னான். குண்டுகள் வெடிக்கும் சத்தம் நெருங்குவதுபோல கேட்க, என்ன நடக்கும் என்று கேட்டேன். விட மாட்டாங்களடா. ஏதாவது செய்வாங்கள் பாரன் என்றான். சிறிது நேரத்தில் விடை பெற்று வீட்ட வந்துவிட்டேன்.

நவாலிக்கு அருகில் குண்டுகள் விழத் தொடங்க நாமும் சுதுமலை நோக்கி சென்றுவிட்டோம். பின்னேரம் ஒரு நான்கரை மணி அப்படி இருக்கும் தொடர்ச்சியான சத்தம். திடீரென புக்காராவின் வட்டமிடல். அதன் சத்தம் மிக கிட்டாவாகக் கேட்டது. இலக்கை கண்டுபிடித்துவிட்ட திருப்தி அந்த சத்தத்தில் ஒளிந்திருந்தது. அதன் ஒலி மிக நெருங்கி வந்து விலகியபோது நவாலி முழுதுமே அதிர்ந்தது. தேவாலயப்பக்கமாக ஒரே புகைமூட்டம்.

நிறையச் சனம் செத்திட்டுதாம் என்று எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள். அடுத்தநாள் வீட்டைப் பார்த்துவிட்டு வருவதற்காக குண்டு மழைகளுக்கிடையே வந்தபோது, இடிபாடுகளுக்கிடையே மீட்கப்பட்ட உடல்கள் குவிக்கப் பட்டிருந்தன. அவற்றில் முகம் சிதைந்து போய், குருதிக் குளியலுக்குள் பிரதீஸும் கிடந் தான். அவன் தந்தை எல்லோரையும் இழந்து விட்டு கதறிக் கொண்டிருந்தார். நானும் இன்னமும் அழுதுகொண்டிருக்கிறேன். கண்ணீரோடு அந்த மோதிரத்தையும் பார்த்துக் கொள்கிறேன். ஒவ்வொரு ஜூலையும் அதன் பின் எனக்கும் கறுப்பாகவே மாறியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, ஜூலை – 16, ஜூலை, 2013

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

sudarolijaffna@gmail.com

# கனவுலக கணக்கு வழக்குகள்

“இலங்கையில் வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 78வீதமானோர் சிங்களவர்களாகவே இருக்கின்றனர். இதே வீதத்திலேயே அவர்கள் வடக்குக் கிழக்கிலும் இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படியல்லாமல் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 98வீதமானோர் தமிழர்களல்லவா இருக்கின்றனர். இது எந்த வகையில் நியாயம்?” என்று புலம்பித் தீர்த்திருக்கிறார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.

அவரின் கூற்றுப்படி புலிகளின் சதியாலேயே சிங்களவர்கள் வடக்குக் கிழக்கில் வாழமுடியாமல் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். அதனாலேயே எல்லா இடங்களையும் போல இங்கு பெரும்பான்மை இனமாக சிங்கள வர்கள் உருவெடுக்க முடியவில்லை. இதை நினைத்துத்தான் பாதுகாப்புச் செயலர் வெம்பி அழுகிறார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வீக பூமி என்பதும் காலங்காலமாக அவர்களே அங்கு பெரும்பான்மையாக இருந்து வருகிறார்கள் என்பது வரலாற்று ரீதியான சான்றுகள் உணர்த்தியும் கூட பாதுகாப்புச் செயலருக்கு அந்த விடயம் உறைக்கவில்லை. அவரின் கூற்று ஆற்றைக் கடக்க முயன்ற ஒரு கணித மேதையின் கதியையே சொல்கிறது.


ஒரு மழைகாலம். ஆற்றில் வெள்ளம் வேகமெடுத்துப் பாய்ந்து கொண்டிருந்தது. அதைக் கடக்க ஒரு கணித மேதையும், ஒரு மீனவனும் முயன்றார்கள். ஆற்றின் கரையில் நீரின் அளவு இரண்டடி. நடுவிலோ எட்டடி. இரண்டையும் கூட்டி சராசரியைக் கணித்தார் கணித மேதை. விடை ஐந்தடி என்று வந்தது. ஆகவே ஆறடி உயரம் உள்ள தன்னை அந்த ஆறு மூழ்கடிக்காது என்ற முடிவோடு அதனை நடந்தே கடக்க முடிவெடுத்தார். ஆனால் மீனவனோ ஆற்றில் மிதந்து வந்த ஒரு பலகைத் துண்டைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அதனைக் கடந்துவிட்டான். அவனைப் பார்த்து ஒரு நக்கல் சிரிப்புடன் ஆற்றில் இறங்கிய கணித மேதை நடு ஆற்றுக்குள் வந்தபோது எட்டடி நீருக்குள் மூழ்கி இறந்து போனார்.

எல்லா இடங்களிலும் ஒரே வாய்ப்பாடு செல்லுபடியாகாது என்பதையே இந்தக் கதை உணர்த்தி நிற்கிறது. அது போலவே நாட்டின் 78 வீதமானோர் சிங்களவர்கள் என்ற வாய்ப்பாடும் வடக்கு - கிழக்கில் செல்லுபடி அற்ற ஒன்றுதான். அதற்கான காரணங்களை வரலாற்றின் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னால் பயணித்தால் மாத்திரமே கண்டறிய முடியும்.

அதை விட்டு விட்டு எல்லாம் தெரிந்த ஏகாம்பரம் போல நடைமுறைக்கு சாத்தியமற்ற பேரினத்தின் அடக்குமுறையை நியாயப்படுத்துகின்ற கணக்கு வழக்குகளை எடுத்து விடுவது ஒரு நாட்டின் பாதுகாப்புச் செயலருக்கு அழகாக இருக்க முடியாது.

பாதுகாப்புச் செயலரின் இந்தக் கூற்றைக் கேட்கும் போது வடிவேலுவின் “ஐயோ! ஐயோ! சின்னப்பிள்ளைத் தனமாகவல்லோ இருக்குது” என்ற வரிகளே ஞாபகத்திற்கு வருகின்றன.

# துரத்தும் துயரங்கள்!



– தம்பி

இலங்கை மண் தமிழர்களுக்கு துயரங்களையே தொடர்ச்சியாக வாரி வழங்கி வந்திருக்கிறது. மே, ஜூன், ஜூலை மாதங்கள் தமிழ் இனத்துக்கு பெரும்பான்மை அரசினால் வன்முறை கட்டவிழ்ந்துவிடப்படும் மாதங்களாக இருந்து வந்துள்ளமை இதுவரைக்குமான வரலாறு. 1983 ஜூலைக் கலவரமும் 2009 மே இனப்படுகொலையும் இதற்கு ஆதாரமானவை இப்போதும் கூட கொலைகளின் மாதமாகிய ஜூலையில் வடக்கு தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதைக்கும் தேர்தல் அரசியல் அறிவிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டு கொண்டிருக்கின்றது. கத்தியுமின்றி, இரத்தமுமின்றி மேற்கொள்ளப்படும் இவ்வழிப் பறி அரசியல் தமிழர்களை அதாள பாதாளங்களுக்கு தள்ளி அழிக்கும் சமிக்ஞையாக தெரிகிறது. இச்சந்தர்ப்பத்தில் ஜனநாயக மூலாம் பூசிக்கொண்டு கொலையைத் திணிக்க வருபவர்கள் பக்கம், தமிழர்கள் வாக்கு சாயாமல் இருப்பதற்கான ஓர் நினைவுப் பகிர்வுகளாக இப்பதிவு 17 – 23 ஜூலை2011 சுடர் ஒளியில் இருந்து மீளப் பிரசுரிக்கப்படுகிறது.

### மாணவர்களும் தாக்கினர்

<u>பொன்னையா சிவகாந்தன் - மல்லாகம்.</u>

எங்கள் வீட்டைத் தாக்கியவர்கள் மகாவித்தியாலய மாணவர்கள் என்று தெரிய வந்தது. என் குடும்பத்தில் 4 பேர். எந்தப் பொருளையும் எடுக்காமல் கடற்கரைப் பக்கமாக ஓடினோம். மாலை ஆறு மணிவரை தெரிந்த ஒருவர் எங்களை ஒளித்து வைத்திருந்தார். தமிழர்களை வீடு வீடாகத் தேடித் தாக்கப் போகின்றனர் என்று சிலர் சத்தமிட்டனர். அத்தருணத்தில் சில சிங்கள நண்பர்கள் அகதி முகாமில் சேர்த்தனர்.

### என் தங்கையைக் கற்பழித்து...

<u>ரவிவர்மா - மிருசுவில், யாழ்ப்பாணம்.</u>

1981 இலிருந்து எனது குடும்பத்தோடு குண்டசாலையில் வசித்து வந்தேன். வன்செயல் நடந்த ஜூலை 27ஆம் திகதி இரவு 2 மணிக்கு வேலை செய்யும் இடத்திலிருந்து வீடு திரும்பினேன். என் கிராமத்தில் 25 பேர் வரை கொண்ட ஒரு கூட்டத்தைப் பார்த்தேன். அவர்கள், ‘ எங்கள் போர் வீரர்களை யாழ்ப்பாணத்தில் கொலை செய்த தமிழர்களைக் கொல்லுங்கள்’ என்று சத்தமிட்டார்கள். நான் எனது வீட்டை அடைந்தபோது எனது வீடு முழுவதும் எரிந்து தணலாகக் காட்சியளித்தது. என் அம்மாவினதும் தம்பியினதும் கருகிய உடலங்களைக் கண்டேன். தங்கையைத் தேடினேன். 15 யார் தொலைவில் கோப்பிச் செடிகளுக்கு அருகில் தங்கையின் சடலத்தைக் கண்டேன். அவளின் அரை நிர்வாண உடல் அவளின் சட்டை கிழிந்திருந்தது. சேலையைக் காணவில்லை. அவளது உடலிலும் முகத்திலும் கீறல்கள். அவள் இறக்கும்முன் போராடி இருப்பது என்பதைக் காட்டியது. அவள் கற்பழிக்கப்பட்டிருந்தாள் என்பதை பெண் உறுப்பில் இருந்த இரத்தம் காட்டியிற்று. ஒரு பென்றன் சங்கிலி அவ்விடத்தில்கிடந்து குற்றவாளியைக்காட்டித்தந்தது. எனது அயல்வீட்டவன், ஒரு சிங்களவன் அணிந் திருந்த சங்கிலி அது. அவன் காடையன். அவன் புச்சி பண்டாசிறி.

### குப்பை லொறியில் ஒரு கால்...

<u>பாலச்சந்திரன் - காரைநகர்.</u>

கடந்த ஜூலை 25ஆம் திகதி தொழில் புரியச் செல்லும் வழியில் நண்பர் எதிர்ப்பட்டு மருதானைப் பகுதியில் தமிழ்க் கடைகளுக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலையைத் தெரிவித்தார். மெயின் வீதி லீலா ஸ்ரோர்ஸ் முன்னால் கடற்படை இராணுவ வீரர்கள் சூழ்ந்து நிற்க யாழ். நகரிலிருந்து வந்த வாகனம் ஒன்று பெற்றோல் ஊற்றி தீ வைக்கப்பட்டது. பஸ் நிலையத்தில் 4 வயோதிபத் தமிழர்கள் கோரமாக வெட்டப்பட்டு அரை உயிருடன் தீ வைக்கப்பட்டனர். ஓர் அழகான இளைஞன் எங்கள் வீட்டு வாசலில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டான். காடையர்களால் தாக்கப்பட்ட அவன் குற்றுயிராகக் கிடக்க ஒரு பொலிஸ் அதிகாரி வந்து இவன் புலி என்று சொல்லி ஒரு லொறியில் இருந்து 4 ரயர்களை எரித்து அவன் மேல் போட்டு பெற்றோல் ஊற்றி எரித்த கொடுமை. எரியாமல் கிடந்த அவனது கால் ஒன்றை மறு நாள் காலையில் குப்பை லொறியில் எடுத்துப் போனமை என்பதை மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொண்டு வீட்டின் கூரையின் மேல் இருந்தேன். என் வீட்டுக்கு காடையர்கள் வரும்முன் மின் வெளிச்சத்தை அணைத்திருந் தோம். ஆனால், அவர்கள் மெழு குவர்த்தி கொழுத்தி வீட்டைக் கண்டுபிடித்தார்கள்.

27ஆம் திகதி கடையைப் போய்ப் பார்த்தேன். முன் கதவு பூட்டி யபடி இருந்தது கூரை எரிந் திருந்தது. கடைக்குள் ஒரு பொருட் களையும் காணவில்லை.

**மூக்கை அறுத்து...**

**ஏ. சிவநாதன் - மாத்தளை.**

தெல்வெல பகுதியில் 2 தமிழ்க் குடும்பங்கள் இருந்தன. அவர்கள் வன்செயலைக் கண்டு பயந்து வெளியேறிய பின்னர். வீடுகளை தீயிட்டு கொழுத்தினார்கள். கொள் ளையடித்தார்கள். மாத்தளை நகரைக் கலக்கிய காடையர் முத்து மாரி அம்மன் கோபுரக் கலசத்தில் ஏறி பௌத்த கொடியை நாட்டி னர். கோயில் அலுவலகம், திருமண மண்டபம், ஐயரின் வீடு எரிந்து கொண்டிருந்த போது கோயி லுக்கு உள்ளேயிருந்து 5 பிக்குகள் வரை வெளியேறுவதைக் கண்டேன்.



# துரத்தும் துயரங்கள்!

**அண்ணா எங்கே?**

**சத்தியரூபன் - வேலணை. சத்தியரூபன் சத்தியசீலன் சகோதரர்கள்.**

தம்பி ஆட்டுப்பட்டித் தெரு கடை ஒன்றில் வேலை செய்தார். அண்ணன் நொறிஸ் றோட் கடை களில் புரோக்கராகக் கடமையாற் றினார். கலவரம் தொடங்கியதும் ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் முகாமிற்குப் போகும் வழியில் சம்பளப் பணம் மற்றும் உடைமைகளைக் கத்தி முனையில் காடையர் பறித்துக் கொண்டனர். அண்ணன் சத்திய சீலன் இதுவரை வீடு திருப்ப் வில்லை. எங்களை நம்பி வாழ்ந்த குடும்பம் கவலையில் மூழ்கியுள் ளது. எங்களது சொத்து ஒரு ஓலைக் குடிசையும் சிறு காணித் துண்டும் தான்.

**குத்திய கத்தியுடன் ஓடி...**

**நா. சங்கரம்பிள்ளை - மொரட்டுவ.**

சம்பவ தினத்தன்று காலை. நான் வேலை செய்யும் கடைக்கு 3 சிங்களக் காடையர் வந்தனர். அவ்வேளையில், நிலைமையை உணர்ந்து கடையை மூட முயற்சித்தேன். அவர்கள் வைத் திருந்த பெரிய பொல்லுகளால் தாக்கினர். காதுகளிலும், தலை யிலும் இரத்தம் வடிய அடுத்த கடைக்கு ஓடினேன். அவர்கள் கடையில் இருந்த பணத்தை எடுத்துச் சென்றுவிட்டனர். நான் பொலிசுக்குச் சென்று நடந்தவற்றைச் சொன்னேன். அவர்கள் என்னை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத் தனர். அங்கே இருந்த கடமையில் இருந்த வைத்தியர் என்னைத் திரும் பிப் பாராமல் போய்விட்டார். அங்கிருந்த தாதியர்களின் உதவியு டன் 5 நாள்கள் சிகிச்சை பெற்றேன். காயங்கள் மாறி வந்தன. 29ஆம் திகதி 3 மணியளவில் நான் நித்திரையாய் இருக்கும்போது 20 காடையர்கள் வரை வந்தனர். அதில் ஒருவனுக்கு 18 வயது இருக்கும். அவன் என் வயிற்றில் கத்தியால் குத்தினான். கத்தியோடு மதிலேறிப் பாய்ந்து தப்பும்போது பொலிஸார் என் இடுப்பில் இருந்த கத்தியை இழுத்து விட்டனர். களுபோவில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டேன். அங்கும் சிங்கள நோயாளர்களும், காடையர்களும் தமிழர்களை பயங்கரமாகத் தாக்கிக் கொண்டிருந் தனர். அதனால் கொழும்பு வைத்திய சாலைக்கு அனுப்பப்பட் டேன். இந்நாட்களில் அங்கு வேலை செய்யும் சிப்பந்திகள் என்னைப் பார்த்து இப்போ உங்களுக்கு தந்திருப்பது போதும். மிகுதி யாழ்ப் பாணம் வந்து தருவோம் என்று காறி உமிழ்ந்தனர்.

**கூரை மேலிருந்து...**

**லட்சுமணன் - கொழும்பு.**

25ஆம் திகதி காலை 9 மணியள வில் பெரிய கூட்டம் ஒன்று.



கூச்சலிட்டபடி வந்துகொண்டிருந் தது. நான் கடையை பூட்டிவிட்டு கியூ வீதியில் சென்று ஒரு வீட்டில் இருந் தேன். 10 மணி இருக்கும். கடை எரிவதாகச் சொன்னார்கள். மாலை 6 மணியளவில் கடைகளில் கூரைமேல் சில ஆட்கள் இருப்பதாகச் சொன் னார்கள். நான் சிவசுப்பிரமணி சுவாமி கோயிலுக்குப் போய் இருந்து விட்டு வரும் வழியில், என் கைக் கடிகாரம், பணம் எல்லாவற்றையும் பலர் கூடிப் பறித்துக் கொண்டனர். இரவு 11 மணியளவில் எனது வீடு உடைக்கப்பட்டது. எனது வீட்டுப் பொருட்கள் எல்லாம் திருடப்பட்டது. 1 மணி நேரமாக இதனைப் பார்த்துக்

28ஆம் திகதி ஒரு சிங்கள இளைஞன் சுட்டுக் கொல்லப்பட் டான். தமிழர்கள் சுட்டதாகச் செய்தி பரவியது. 3 லொறியில் காடையர்கள் வந்தனர். அட்டகாசம் புரிந்தனர். மகாவெலவில் எனது தம்பியின் வீடு எரிக்கப்பட்டது. இன்னொரு தம்பியை வெட்டி வயலில் போட்டார்கள். உடனே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல விடாமல் தடுத்தார்கள். இவருடைய வீடு, கடை எல்லாம் எரித்துவிட்டு அம்மாவின் நகைகளைப் பறித்தார்கள் அது கழர மறுத்தது. மூக்கை அறுத்து எடுத்தார்கள். அம்மா கத்தியபோது பிஸ்கட்டும் பார்லியும் கொடுத்துவிட்டுப் போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# இருண்ட தேசம்

அ. இறஞ்சிதமலர்

ஓயாமல் வாகனம் ஓடும் சத்தம். காது இன்னும் பத்து வருடங்களிலே தனது சேவையை நிறுத்தி விடுமோ எனுமளவிற்கு பயங்கர ஒலி. முன்பு எறிகணை, மிக், சுப்பசொனிக் விமான சத்தங்களால் காதுகள் செவிடாகி செயலிழந்தன மட்டுமன்றி, இப்ப தொடர்கதையாக வேறு வடிவில் வருகிறதே

தொலைக்காட்சிப் பெட்டியில் அவனது புலன்கள் ஒருங்கு சேர்ந்து இயங்கினாலும் புறச்சூழல் வெளி ஆரவாரங்களாலும் கவனத்தைத் திருப்பினான்.

மாலை நாலுமணிக்கே கோயில் பூசைகள் எல்லாம் முடிந்துவிடும். சாமான் வாங்கச் சென்றவர்கள், ஆஸ்பத்திரிக்குச் சென்றவர்கள் நாலுமணிக்கு எப்படியும் வந்து விட வேண்டும்.

“தேனா...தேனா... பிள்ளைக்கு என்ன சாப்பாடு'' ‘‘அவனுக்கு பாண்தான் வாங்கி வச்சிருக் கிறேன்” “ஏன்...அவனுக்கு நூடில்ஸ் செய் து குடுத்திருக்கலாமே...'' ‘‘நான் கடைக்குப் போகேல்லை” வெறுப்பாகச் சொன்னாள். “முன்வீட்டு தங்கச்சியம்மாச்சியைக் கேள். வாங்கி வருவா...'' “அந்த மனிசி அவங்களைத்திட்டிற திட்டு மாதிரி என்னையும் திட்டும்...'' ‘‘உந்த மனிசிக்கு அவ்வளவு பயமே...” கதைத்துக் கொண்டிருக்கும் போ தே நாய்கள் ஊளையிடும் சத்தம்.


வழக்கமாக நாய்கள் தமது பணியை இரவில் கனகச்சிதமாக செய்துவிடுங்கள். ‘ஓவரைம்’ வேலை யும் நடக்கும். பயங்கர ஓசைகளைக் கேட்டு அந்த ‘அரியாலைக்’ கிராமம் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் நாட் கள் தொடர்ந்தன.

மதன், குசினிலைட்டையும், வெளிவிறாந்தை லைட்டையும், ‘ஓவ்’ பண்ணிவிட்டு தனது அறையிலுள்ள லைட்டை மாத்திரம் போட்டுவிட்டு வேலை செய்தான். அவனின் பெற்றோர்,சகோதரர் பதினைந்து வருடங்களுக்கு முன் பே பிரான்சில் குடியேறி விட்டனர். மதனையும் அழைத்துப் போக முயற்சி செய்தாலும் தன் அன்புக் காதலி தேனகாவை விட்டிட்டும், சொந்தஊர், படிப்பை விட்டிட் டும் ‘நான் வரமாட்டன்’ என்ற ஒரு சொல்லோடு முழுக்குப் போட்டு விட்டான்.

ரீவி மெக்கானிக் தொழிலில் ‘எக்ஸ்பேர்ட்’ ஆகியும் விட்டான். தேனகாவை கார்ந்தர்வ மணம் புரிந்து ஒரு பிள்ளைக்குத் தந்தையும் ஆகிவிட்டான்இப் போது.

அரியாலையிலுள்ள அந்தப் பெரிய வீட்டில் உல்லாசமாக மகிழ்ந்திருந்த வேளையில் பாரிய இடப்பெயர்வு, வரலாறு காணாத சனசமுத்திரம், இட்ட அடி நோக, எள்விழ இடமின்றி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பட்டினி, தண்ணீர் விடாயோடு கால் கையிலும் காயங்களைப் பெருக்கி எல்லோரும் போல தென்மராட்சியில் மிருசுவிலில் வந்து தங்கினான்.

காய்ச்சல், வயிற்றோட்டம் சாப்பாடின்மை, மயக்கம், சோர்வு,



அக்கம் பக்கச் சண்டை சச்சரவு, வேலையில்லாத கொடுமை, மருந்து மாத்திரை இல்லாமை எத்தனை தடைதாண்டல். அத்தனையிலும் பங் கு பற்றினார்கள்.இந்தச் சாபக்கேடு எப் போ தீரும் என்ற கனவில் காலத்தை ஓட்டிக் கொண்டிரு ந்த வேளை யாழ்நகருக்குள் சிங்கள இராணுவம், மக்கள் குடியேற நயவஞ்சகமாக அழைத்தது.

கொடியபசி, நோயை எதிர்கொள்ள முடியாமல் ஊருக்கு திரும்பி விட முண்டியடித்தது சனம்.எத்தனை வீடு கள் வெறுமையாக இருந்தன. அங்கேயும் நிம்மதியா? ஒவ்வொரு சந்தியிலும் இராணுவ காவலரண் புதிதுபுதிதாக புற்றுப் போல எழுந்தது. நல்லபாம்பு, புடையன் பாம்பு, கொம்பேறிமூக்கனும் அதற்குள் குடிபுகுந்து விட்டன.

அந்தக்கிராம மக்களால் அதை அழிக்கவும் முடியவில்லை. அழிக்கவும் இயலாது...சிவனே... என்று இருந்து விட்டனர்.

பொன்விலையில் விற்ற மண்ணெண்ணைவிற்று மதன்குடும்பம் காலத் தை கடத்தியது. அந்த அரியாலை மக்கள் மட்டுமல்ல. ஒட்டுமொத்த குடாவுமே சிறையில் வாடி நொந்திருந்தது.

நானூறு,ஐந்நூறு குடும்பங்கள் இருந் த கிராமம். இப்போ பத்தோ இருபது குடும்பங்களை மட்டும் வைத்துக் கொண்டிருந்தது.

அடிக்கடி சுற்றிவளைப்பு... ஐந்து மணிக்கு சாராயம் குடித்து விட்டு கூத்தடிக்கும் இராணுவ வெறியர்களின் அட் டகாசம் முடியுமட்டும் அவர் கள்மூலையில் பதுங்கியேகாலம் கழிப்பர்.

தொண்ணூறாம் ஆண்டு... இராணுவம் கொதிநீர்பட்ட நாய்போல, மதம் பிடித்த யானைகளாகி ஆவேசத்துடன் வீடுவீடாக வந்து ஆட்களைப் பிடித்தி ழுத்து சித்திரவதை செய்து கொண்டிருந்த காலம்.

‘‘மதன்... உங்கையிருக்காத மோனை... எத்தனை லட்சமெண்டாலும் அனுப்பிறம்... இஞ்சை வந்து சேர்... இல்லையெண்டாலும் கொழும்பில எண்டாலும் வந்து இரு...”

அடிக்கடி அம்மாவின் கடிதங்கள் அவனிடம் வரும் நிலவுக்கு ஒளிச்சு பரதேசம் போறதே... அப்பிடியெண்டா யாழ்ப்பாணச்சனம் முழுக்கப் போ னா... அவங்களுக்கு நல்ல வாசி. கொஞ்ச நாளையில அரசமரமும் புத்தர் சிலையும் விதைக்கப்பட்டிருக்கும்... அவனது இளஇரத்தம் கொதித்தது....

இரவு பத்துமணி... அமுதன் அடிக்கடி எழும்பினான். மதன் அவனை அமத்திப் பிடித்து நித்திரையாக்கு

**அடிக்கடி சுற்றிவளைப்பு... ஐந்து மணிக்கு சாராயம் குடித்துவிட்டு கூத்தடிக்கும் இராணுவ வெறியர்களின் அட்டகாசம் முடியுமட்டும் அவர்கள் மூலையில் பதுங்கியே காலம் கழிப்பர்**

வான்.... “என்ரை அப்பு.. நித்திரை கொள்ளப்பு...'' தேனகா நித்திரையின்றி விழித்தி ருந்தாள்.

“என்னப்பா.... எனக்கெண்டாப் பயமாக் கிடக்கு... பூட்ஸ் சத்தம்... இண்டைக்கு வலுகிட்டக் கேட்குது .... பருத்துறைக்குப் போவம்... நான் இனி இஞ்சையிருக்கமாட்டன்....”

“ஏன் பருத்தித்துறையில உவங் கள் இல்லையே... பேசாமப்படு...” பயத்தைக் காட்டிக்கொள்ளாமல் அமத்திப்போடுவன் பேச்சால்.

‘‘உவங்கட கண்ணும், நிக்கிற நிலையும் எனக்கென்னவோ... பயமாய்க் கிடக்குது... தயவு செய்து முரண்டு பிடிக்காதையுங்கோ... நாளைக்கு விடியப்போவோம்....”

“ஓம் ... ஓம் போவம் ... தேனகா இப்பபடும்...” டக்... டக்... கதவு தட்டிக் கேட்டது. உயர்ந்து பருத்த ஆமிக்காரர்.... கையில் ரோர்ச் லைட்...

“சிவ... சிவ பரம்பொருளே... நித்திலமே... போற்றி என் வாழ் முதலாகிய பொருளே.... கரு ணை க் கடலே.. எங்களைக் காப்பாற்று.... காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி...”

வாய் விட்டு மளமளவென்று படித்தாள் தேனகா. ‘‘டோ.... வெளியால வாடா....” அமுத னை த் தூக்கிக்கொண்டு தேனகா கட்டிலுக்குக் கீழே பதுங்கிவிட்டாள்.

மதனை இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அமுதன் அழு ம் போது வாயை இறுகப் பொத்திக் கொண்டு தானும் சேர் ந்து அழுதா ள். பயத்தால்கைகால்விறைத்து விட் டது.

பூட்ஸ் சத்தம் எங்கும் கேட்டது. “ஏய்... பொம்பிளை ... வா வெளி யே... கட்டிலுக்குக் கீழே ஒரு சூடு. தேனகாவின் இடுப்பில் துளைத்தது குண்டு. அவள் அமுதனோடு சாய்ந்து விட் டாள்.

அமுதன் மயங்கிவிட்டான். இரண் டு வயது பாலகன் தனித்து விட்டான். ... பச்சைக்குழந்தை கண் விழித்துப் பார்த்தபோது தேனகா விறைத்த கட்டையாகிவிட்டாள்.

குழந்தை பயத்தில் அழ முடியாமல் தவித்ததை படைத்த ஆண்டவனும் பார்த்துக் கொண்டிருந்தான். கோயில்கள் நிறைந்திருந்த ஊரில் கொடிகட்டிப் பறந்த கொலை வெறியாட்டத்தைப்பார்த்துக் கொண்டிருந்த கடவுள்கள் எல்லாம் ஏன் சக்தியிழந்து நிற்கின்றன....?

அப்பாலகன் மெல்ல வெளி யால் வந்து “அம்மா... அப்பா... என்ரை அப்பா...'' மழலையின் குரல் முருகனுக்குக் கேட்டதா... பிள்ளையாருக்குக் கேட்டதா... இல்லை அம்மனுக்கு கேட்டதா... மனிதம் மிக்க மனிதருக்கும் கேட்கவில்லை”

நரபலி எடுக்வென வந்திருக்கும் பேய்களுக்கு கேட்டது. கழுகு கொத்திச் செல்லும் இரையாக இரும்பு மனிதரின் கரத்துள் சிக்கியிருந்தான்.

இன்றுவரை அமுதன் என்னவா னான்? மதன் உயிரோட இருக்கிறானா? தேனகாவின் உடல் நாய் சாப்பிட்டதா? அடக்கம் செய்யப்பட்டதா....? இது பற்றி அறிந்து கூற ஆபத்பாண்டவர்கள் யாருள்ளர்...?

*** *** ***



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

— தமிழில்: ஜெகன்

# தாயைக் காத்த தனயன்

**கடும் மழை. புயல் அறிவிப்பு வேறு தனது பத்து வயது மகன் ரோனியுடன் பள்ளிக் கூட விளை யாட்டு நிகழ்வுக்காக மகன் ரோனியை அழைத்துச் சென்ற தாய் சில்வியா மகனுடன் வீடு திரும்பிய போது வழியில் அவர்கள் மழை வெள்ளத்தில் அகப்பட்டுக் கொள்கின்றனர். வெள்ளத்தில் அள்ளுண்டு சென்ற அவர்கள் ஒருவாறு தம்மைத் தற்காத்துக் கொண்டாலும் எதிர்பாராத வகையில் தாய் சில்வியா நீர் நிரம்பிய பெரும் பள்ள மொன்றினுள் வீழ்ந்து விடுகிறாள்.**

03



உண்மைச் சம்பவம்

[சென்ற வாரத் தொடர்ச்சி]

மின்னிய மின்னலின் ஒளிக்கீற்றில் சுமார் 75 அடி தூரத்துக்கப்பால் ஒரு டெலி போன் கம்பம் நிமிர்ந்தபடி நிற்பது அவர்களின் பார்வையில் பட்டது. அப்பகுதி சற்று ஆழமில்லாத பகுதி யாகவும் தெரிந்ததைச் சில்வியா கண்டு கொண் டாள்.

எப்படியும் அந்தக் கம்பம் இருக்கும் பகுதிக் குச் சென்றாள். நீரின் ஆழம் குறைவு தந்திக் கம்பத்தை பிடித்துக் கொண்டு நிற்பதற்கு வசதியாக அமையும். தடுமாறியபடியே எழுந்த சில்வியா ரோனியையும் ஒரு கையால் பிடித்துக் கொண்டு தந்திக் கம்பம் இருந்த திசையை அனுமானித்துக் கொண்டு முட்கம்பி வேலி யையும் அடையாளமாகத் தொட்டுக் கொண்டு மெதுவாக நடக்கத் தொடங்கினாள். கையின் சதை கிழிந்த காயத்தின் வலி ஒரு புறம் அவளை வருத்தியும் இமாலயப் பிரயத்தனத்துக்குப் பின் இருவரும் ஒருவாறு தந்திக் கம்பத்தை அடைந்து அதை இறுக்கிப் பிடித்துக் கொண்டார்கள். தந்திக் கம்பத்துக்கு அப்பால் பாதையை விட்டுவிலகி ஒரு பெரிய குட்டை இருந்ததும் அது நீரினால் நிறைந்து கிட்டத்தட்ட பத்து அடி ஆழமுள்ள சக்தி நிறைந்த குட்டையாக இருந்ததும் அவர்க ளுக்குத் தெரிய நியாயமில்லை.

ஏற்கனவே குளிரினால் விறைத்தும் முட்கம்பி வேலியால் கிழிக்கப்பட்ட இரத்தக் காயங் களினாலும் பாதிக்கப்பட்டிருந்த சில்வியாவின் கைகள் வலுவிழந்து மெதுவாகக் கம்பத்திலிருந்து நழுவத் தொடங்கின. திடீரென்று பிடி நழுவவே குட்டையை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டு இருளில் மறைவதை ஒருவராலும் தடுக்க இயலவில்லை. சில்வியாவின் குரல் மட்டும் தீனமாக ஒலித்தது. மெதுவாகக் குறைந்து கொண்டு வந்தது "ரோனி இறுக்கிப் பிடித்துக் கொள்! இறுக்கிப் பிடித்துக் கொள்! அம்மாவைப் பற்றி யோசிக் காதே!"

சில்வியா இப்படிக் குட்டையில் விழுந்த போது தான் பொலிசார் வந்து சுற்றிவரப் பார்த்து ஒருவரும் இல்லையென்று உணர்ந்து கொண் டார்கள். தந்திக் கம்பத்தருகில் சென்று சில்வியா குட்டைக்குள் விழுந்த கம்பத்தை பொலிசார் எப்படி அறிவார்கள்? காரிருள் வேறு விடிந்த பின் பார்க்கலாம் என்று அவர்கள் திரும்பி விட்டார்கள்.

தாயின் கதறல் நிச்சயமாக அவள் ஆபத்தில் சிக் கியதை ரோனிக்கு உணர்த்தியது. அம்மாவைக் காப்பாற்ற வேண்டும் காப்பாற்ற வேண்டும் என்ற வெறி அந்தப் பத்து வயதுப் பாலகனை ஆட் கொண்டது. அத்துடன் "நான் இல்லாத நேரத்தில் நீ தான் அம்மாவைப் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று அவன் தந்தை அடிக்கடி சொல்வதும் அவனை உத்வேகம் கொள்ள வைத்தது. ஒரு பாலகனின் பாசத் துக்கு ஆண்டவனே அடிபணிந்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

சில்வியாவின் தீனக்குரலையும் நீரின் 'சளக் சளக்'

**தாயின் கதறல் நிச்சயமாக அவள் ஆபத்தில் சிக்கியதை ரோனிக்கு உணர்த்தியது. அம்மாவைக் காப்பாற்ற வேண்டும் காப்பாற்ற வேண்டும் என்ற வெறி அந்தப் பத்து வயதுப் பாலகனை ஆட் கொண்டது.**

என்ற சத்தத்தையும் இலக்காக வைத்துக் கொண்டு குட்டையை நோக்கித் தாவினான் ரோனி. இதற்குள் சக்தியெல்லாம் இழந்து நாலைந்து முறை நீரில் மூழ்கி எழுந்ததோடு சேறு கலந்த தண்ணீரும் சில்வியாவின் வயிற்றுக்குள் போய்விட்டது. திடீரென ஒரு மெல்லிய கை தன் தலையைத் தாங்குவதை அவள் உணர்ந்தாள். யாரென்று அவளுக்குத் தெரியவில்லை.

குட்டையில் பாய்ந்த ரோனிக்கு ஆண்டவன் உதவிக்கரம் நீட்டினார். அவனது பாசத்துக்கும் அம்மாவைக் காப்பாற்ற வேண்டும் என்ற வெறிக்கும் ஆண்டவன் இறங்கி வந்ததாகத்தான் கொள்ள வேண்டும். ரோனியின் கையில் அம்மாவின் தலை சிக்கியது. நீச்சல் பழகும் போது பலமுறை காலால் உதைத்து மிதந்ததை நினைவுக்குக் கொண்டு வந்தான். அவசரவெறியோடு அம்மாவின் குட்டையான தலைமயிரையும் அவள் அணிந்திருந்த மேல் சட்டையிலிருந்த பெல்ட்டையும் தடவிப் பற்றிப் பிடித்துக் கொண்டு அந்த இருளிலும் காலை உதைத்து உதைத்து நீந்தத் தொடங் கினான். இலக்கு என்ன என்றும் தெரிய வில்லை. எங்கே போய்ச் சேரப்போகி றோம் என்பதும் தெரியவில்லை. அவனது நீச்சல் பயிற்சியின் அரங்கேற்றம் அங்கே அந்தச் சூழ்நிலையில் நடந் தேறியது.

நீந்தினான்! நீந்தினான்! ஒரு கையில் தாயின் தலைமயிர் இன்னொருகையும் காலும் நீந்தி முன்னேற உதவின. கற்ப னையை விட அதிசயம் பெரிய நீச்சல் வீராங்கனைகளாலேயே முடியாத காரியம் எப்படி இந்தப் பத்து வயதுச் சிறுவனால் முடிந்தது? இதை யாரால் விளக்க முடியும்? தண்ணீர் குடித்திருந்தும், சோர்வடைந்தும், கையில் காயமடைந்தும், இருந்த சில்வி யாவின் உணர்விழந்த உடலை இழுத்துச் செல்வது மிகமிகக் கடினம் இது கூட கடவுளின் அருள் தானே? எவ்வளவு நேரம் அப்படி நீத்தினானோ தெரியவில்லை. ஒரு மணி அல்ல இரண்டு மணி அல்ல கிட்டத் தட்ட மூன்று மணி நேரம் வரை இருக்கலாம்.

கடைசியில் விடிந்து கொண்டு வரும் நேரமாக இருந்தது. நீரின் ஓட்டமும் உதவி செய்ததால் அந்த நேரம் அவர்கள் மிகவும் சேறாக இருந்த ஆனால், ஒரு அடி உயரம் கூடத் தண்ணீர் இல்லாத பகுதிக்கு வந்து விட்டார்கள். அவர்கள் காரை விட்டி ருந்த இடத்திலிருந்து இது ஏறத்தாழ இரண்டு மைல் தூரமிருக்கும்.

சேறும் சக்தியுமாகத் தண்ணீரும் நிறைந்த அந்தச் சதுப்பு நிலத்திலே அப்படியே கிடந் தார்கள். எங்கே போவது என்ன செய்வது என்று தெரியவில்லை. விடிந்து கொண்டு வந்தது நேரம் அதிகாலை 5.30 ஆக இருக் கலாம் என்று சில்வியா நினைத்தாள். இரு வரும் இவ்வளவையும் தாங்கிக் கொண்டு மயக்கமடையாமல் இருந்த நிலைக்கு யார் காரணம்? அவனின்றி அணுவும் அசை யாதல்லவா?


[தொடரும்....]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பஸில் காமப் பேய்கள்-5

● அனுஷ்கன்



## எங்கேயோ கேட்டகுரல்

ஒரு நாள் இரவுப் பொழுது. ரூமில் இருந்த பல்கலைக்கழக மாணவியொருவரின் கைத்தொலைபேசி அலறியது. தொலைபேசியின் டிஸ்பிளேயை பார்த்த மாணவிக்கு குழப்பம். இதுவரை அறியப்படாத ஒரு தொலைபேசி இலக்கத்திலிருந்து அழைப்பு வந்திருந்தது. குறித்த அழைப்பை எடுப்பதா? தவிர்ப்பதா? என்று மாணவியின் மனதில் சில நிமிடங்கள் போராட்டம். சிறிது நேரச் சிந்திப்புக்கு பின் சரி எதற்கும் ஒருக்கா ஓ.கே. பண்ணிப் பார்ப்போமே என்ற நினைப்புடன் அவரின் கைவிரல் கைத்தொலைபேசியின் பச்சை பட்டனை அழுத்தியது. இதற்காகவே காத்திருந்தது போன்று எதிர்முனையில் "ஹலோ" என்ற ஆண் குரல். அந்தக் குரலை எங்கேயோ கேட்டது போன்று மாணவிக்குத் தோன்றியது. ஆனாலும் மறுமுனையில் ஒலித்த குரல் இரகசியம் பேசும் தன்மையுடன், மெதுவாகவே ஒலித்ததால் "யார்" என்று மாணவியால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. நீங்கள் யார் என வினவிய மாணவிக்கு தன்னை யார் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளாமலே எதிர்முனை ஆண்குரல் மாணவியின் சுகநலன் விசாரிப்பில் இறங்கியது. அதற்குப் பின் ஒருவாறு சுதாகரித்துக் கொண்ட மாணவி,

"ஆர் கதைக்கிறீங்கள்?" என்று கேட்டார். "என்ர குரல் பிடிபடேலையா?" என்ற பீடிகையுடன் மறுபக்கத்தில் உரையாடியவர் தன்னை யார் என்று அடையாளப்படுத்திய போது மாணவிக்கு என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தது. அவர் ஏன் இந்த நேரத்தில் எனக்குப் போன் பண்ணுகிறார்? என்ற குழப்பத்துடன், லெக்சரரின் கேள்விகளுக்கு ஒற்றைச் சொல்லில் பதிலளித்துக் கொண்டிருந்தாள். "எக்ஸாம் நெருங்குது. படிக்கிறீரோ? இல்லாட்டி விளையாட்டோ?" அவரின் குரலில் அக்கறை கொப்பளித்தது.

"இல்லை சேர்! படிச்சு முடிஞ்சுது. இனி நித்திரைக்கு ஆயத்தம்"

"ஓ!அப்ப நான் கதைக்கிறது டிஸ்டொர்ப் இல்லையோ?" கேட்டார் லெக்சரர். "இல்லை சேர். சொல்லுங்கோ"

என்ன சொல்லுங்கோ, கில்லுங்கோ எண்டு கண்டறியாத மரியாதை. பேரை சொல்லிக் கதையடி என்று உரிமையோடு கடிந்து கொண்டார்.

உடனேயே மாணவி பதறித்துடித்து, ஐயோ! பேரைச் சொல்லுறதோ? அது சரியில்லை என்றாள். உன்னை மாதிரி அழகான பெண் என்ர பேரைச் சொல்லிக் கூப்பிட்டாத்தான் இந்த நேரத்தில நல்லாயிருக்கும் என்று பாதை மாறத் தொடங்கியது விரிவுரையாளரின் குரல். அதன்பின் சில நிமிடங்கள் அவள் அழகைப் புகழ்ந்து கொண்டிருந்தார். அவளுக்கு லேசாகப் பயம் பற்றிக் கொள்ளத் தொடங்கியது. தூக்கம் வந்துவிட்டதாகச் சொல்லி அழைப்பைத் துண்டித்துக் கொண்டாள். ஆனால் விரிவுரையாளர் விடவேயில்லை. தொடர்ந்து மாணவியின் கைத்தொலைபேசிக்கு அன்றைய இரவில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான எஸ்.எம்.எஸ்களை அனுப்பிக் கொண்டேயிருந்தார்.

அதன் பின்னரும் அந்த விரிவுரையாளரின் போன் படையெடுப்பு தொடர்ந்தது. சில நிமிடங்கள் மாணவியின் கல்வி, பரீட்சை போன்ற பூர்வாங்க விசாரிப்புக்குப் பின், மாணவியின் அங்க அழகுகள் பற்றிய வர்ணனைகளில் ஈடுபடத் தொடங்கினார். இதைவிட பாலியல் இச்சைகளைத் தூண்டக்கூடிய எஸ்.எம்.எஸ்களை மாணவிக்கு அனுப்பி, களவும் கற்று மறக்க வேணும் என்று தன் செயலுக்கு நியாயம் வேறு கற்பித்துக் கொண்டார். ஆனால் எப்படி மாணவியின் நம்பர் விரிவுரையாளருக்கு கிடைத்தது என்பது சிதம்பர ரகசியம். "நீ சரியான ரியூப்லைற். உன்ர சிநேகிதியோடையும் கதைக்கிறனான். அவளுக்கு எல்லாம் உடன் விளங்கும். போன கிழமை கூட ஒரு செமினாருக்கு என்னோட கொழும்புக்கு வந்து நிண்டவள். ஆனா நீ இன்னும் சின்னப்பிள்ளை மாதிரி பயந்து கொண்டிருக்கிறாய்" என்றும் தூண்டில் போடத் தொடங்கினார். குறித்த விரிவுரையாளர் இது போன்று பல மாணவிகளுக்கு இரவுநேர அழைப்புக்களை ஏற்படுத்தி சல்லாபக் கதைகள் கூறி, தனது வலையில் மாணவிகளை வீழ்த்த முயன்றுள்ளார். குறித்த விரிவுரையாளரின் போன் தொல்லை தொடர்பாக மாணவிகள் எம்மிடம் முறையிட்டுள்ளனர் என்றும் விரைவில் பாலமணியனைப் போல அவரின் சாயமும் வெளுக்கும் என்கிறார் மாணவர் ஒன்றிய பிரதிநிதி ஒருவர். பார்ப்போம் பொறுத்திருந்து.







**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**சுறுசுறுப்புடன் பணிபுரிந்து அதிக நன்மை பெறும், மேஷ இராசிக்காரர்களே!**

உடன் பிறந்தவர்களின், வாழ்வியல் நடைமுறையில் உருவாகிற கஷ்டங்களை நிவர்த்தி செய்ய ஆலோசனை வழங்குவீர்கள். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் குடும்ப ஒற்றுமை காத்திடுவர். தொழில் வியாபாரத்தில் அனுகூலத் தன்மைகளை, அக்கறையுடன் பாதுகாப்பது நல்லது. மாணவர்கள் பெற்றோரின் பணவசதிக்கேற்ப விரும்பிய பொருள் கேட்டு வாங்குவர்.




**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**அனுபவ அறிவை தகுந்த நேரத்தில் பயன்படுத்துகிற, ரிஷப இராசிக்காரர்களே!**

மனதில் நிம்மதியும், பெருமிதமும் நிறைந்திருக்கும். மதிநுட்பத்துடன் செயல்பட்டு முக்கியமான செயல்களை நிறைவேற்றுவீர்கள்.பணியாளர்களுக்கு நற்பெயரும், ஊக்கத் தொகையும் கிடைக்கும். குடும்பப் பெண்கள், கணவரின் அன்பு, பாசம், சீரான பண வசதி கிடைத்து, சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் பெற கூடுதல் பயிற்சி முறை உதவும்.




**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**கடின உழைப்பினால் வாழ்வில் முன்னேற்றம் காணும், மிதுன இராசிக்காரர்களே!**

உங்கள் வாழ்வில், புதிய படிப்பினைகளை தந்திடும். வீடு, வாகனத்தில் பாதுகாப்பு நடைமுறைகளை தவறாமல் பின்பற்றுவது, பொருள் இழப்பை தவிர்க்க உதவும். புத்திரர் படிப்பு, செயல்திறனில் முன்னேற்றம் பெற, உத்வேகமும், தகுந்த வழி காட்டுதலும் அவசியம். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால், படிப்பில் ஞாபக சக்தி வளரும்.




**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கருணை மனதுடன் பிறருக்கு உதவும், கடக இராசிக்காரர்களே!**

தன்னுடன் பழகுபவர்களின் ஆடம்பர செயல்களை பார்த்து, தானும் அது போல, ஆடம்பர பழக்க வழக்கங்களை பின்பற்றுகிற எண்ணம் கொள்வீர்கள். இதனால், அதிக பணச்செலவும், மனதில் நிம்மதி குறைவும் ஏற்படலாம். கவனம் தேவை. மாணவர்கள், லட்சிய மனதுடன் படித்து அதிக தேர்ச்சி விகிதம் பெறுவர்.




**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**நற்செயல் புரிந்து மனதில் மகிழ்ச்சி பெறும், சிம்ம இராசிக்காரர்களே!**

மனதில் அதிக தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த நன்மைகளும், பணவரவும் திருப்திகரமாக கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்குகிற முயற்சியை நிறைவேற்றலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் பின்பற்றுவது அவசியம்.




**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**இயற்கை அழகை ஆராதிக்கும் கலை ரசனை மிகுந்த, கன்னி இராசிக்காரர்களே!**

நிதானித்து பேசுவதால் மட்டுமே, நண்பர் உறவினர்களிடம் மற்ற நற்பெயரை பாதுகாக்கலாம். வீடு வாகனத்தில் நம்பகக் குறைவான எவருக்கும் இடம் தரவேண்டாம். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேற்றுவதால், சிரமங்களுக்கான தீர்வு கிடைத்து மனம் இலகுவாகும். மாணவர்கள், ஆசிரியரிடம் நன்மதிப்பு பெறும் வகையில், படிப்பதில் ஆர்வம் கொள்வர்.




**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**தொடங்கும் செயல்களை மனப்பூர்வமுடன், நிறைவேற்றும், துலாம் இராசிக்காரர்களே!**

பொது இடங்களில், நண்பரால் உருவாகிற சிரமத்திற்கு, நீங்கள் கண்டிப்புக்கு உள்ளாக நேரிடலாம். கவனம் தேவை. இல்லறத் துணையில் மனதில் நம்பகக் குறைவு வராத அளவில் நடந்து கொள்வதால், குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் வேண்டும்.




**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**வாழ்வு முறையை நெறிப்படுத்தி தகுந்த புகழ் பெறும், விருச்சிக இராசிக்காரர்களே!**

உரிய கவனம் கொள்வதால் மட்டுமே, திட்டமிட்ட பணி குறித்த காலத்தில் நிறைவேறும். ஆன்மீக நம்பிக்கை உள்ளவர்களின் அன்பு, ஆசி கிடைத்து மனதில் உத்வேகம் பெறுவீர்கள். இல்லறத்துணை, குடும்பத்தின் சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு, உதவும் வகையில் நடந்து கொள்வர். மாணவர்கள் நன்றாகப் படித்து ஆசிரியர், பெற்றோரின் நன்மதிப்பைப் பெறுவர்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**செயல்களின் விளைவு உணர்ந்து நடந்து கொள்ளும், தனுசு இராசிக்காரர்களே!**

தகுந்த நன்மையும், உபரி பணவரவும் கிடைக்கும். அக்கம் பக்கத்தவரிடம் நல்அன்பு பாராட்டுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். உத்தியோகஸ்தர் சிறப்பாக பணிபுரிந்து, நிர்வாகத்திடம் பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள், படிப்புடன் இதர தகுதிகளை வளர்த்துக் கொள்ள உரிய பயிற்சி மேற்கொள்வர்.




**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**தனது நலத்துடன் பிறர் நலத்தையும் கவனத்தில் கொள்ளும், மகர இராசிக்காரர்களே!**

தகுதி, செயல்திறன் வளர்ந்து வாழ்வில் பெறவேண்டிய முன்னேற்றகரமான பலன்களை அதிர்ஷ்டவசமாக பெறுவீர்கள். சொத்து தொடர்பான ஆவணம், பிறர் பொறுப்பில் தரக் கூடாது. உடல்நலம் ஆரோக்கிய பலம்பெற, சிறு அளவிலான மருத்துவ சிகிச்சை உதவும். இல்லறத்துணையிடம் கருத்து வேறுபாடு வராதபடி பேசுவது நல்லது.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**தனது செயல் நிறைவேறும் வரை பொறுமை காத்திடும், கும்ப இராசிக்காரர்களே!**

மனதில் இனம் புரியாத வகையில் சஞ்சலம் உருவாகும். தெய்வ அனுகூலத்தினால், கடந்த காலத்தில் சிரமம் விலகியதை எண்ணி, நம்பிக்கை கொள்வீர்கள். குடும்பத் தேவைகளுக்கான பணவசதி, சீரான அளவில் இருக்கும். உங்களின் அன்பு, பொறுமை ஒற்றுமை உருவாக உதவும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால், சீரான பணவரவு பெறலாம்.




**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**தன்னால் இயன்ற பணிகளை மட்டும் செயல்படுத்தும், மீன இராசிக்காரர்களே!**

குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். தம்பி, தங்கை அன்பு பாசத்துடன் நடந்து கொள்வர். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க கூடுதல் பொறுப்புணர்வுடன் பணிபுரிவார். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். பெண்கள், கணவர் வழி சார்ந்த உறவினர்களை உபசரித்து நற்பெயர் பெறுவர். மாணவர்கள், பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேய் வருகிறது

இருள் சுழ்ந்து
ஊர் உறங்கி
அமைதி பெறறு அடங்க
ஆழ்மனதில் விதை கொள்ளும்
பிரிவுகளின் எண்ணங்களை

வரிகளாக்க விரல்கள் துடிக்கும்
எழுதுகோல் அழுகை கொள்ளக்
காகிதத்தில் வரைந்திடுவோம்
வாழ்வியலில் நாம் சுமக்கும்

வலிய கணங்களினை...
பேயிருட்டு
முனியடித்து முடிந்தார்கள்
முன்னவர்கள் என்று
பயமிருந்தது இருள்பற்றிச்

சின்ன வயதில்...
இப்போ...
பேயிருட்டே
எம் வலிகளின் ஆற்றுமிடமாய்
எம் கவிகளின் தேற்றுமிடமாய்
எம் பிரிவுகளின் ஒத்தடங்களாய்
மாற...
முனி அடித்து முடிந்தவர்கள் பற்றிப்
பயமிருக்கவில்லை...
வேள்வியிலே வெகுண்டெழும்



ஓமத்தீயாக....
எம் மனதில் புதைந்த கதை
கருக்கொள்ளும் வேளைகளாய்
இப்போது இருள் பொழுது
அது

அன்னையின் வருடல்களாய்
தந்தையின் தரிசனங்களாய்
உறவுகளின் வரவுகளாய்
ஒவ்வொரு இரவுகளிலும்
எம்மோடு உரிமை கொள்ளும்...

வெளிச்சச் சூழலில்
வதைக்கப்படுகிறோம்
இருட்டுக்கணங்களில்
வாழ்வதற்காய்
பேய் வருகிறது இப்போது

முனி அடிக்கிறது பகல்
பொழுதுகளில்...
பயமாய் இருக்கிறது.
வெளிச்சம் பரவுகையில்....

*பா. பொன்நிலவன்*
*மீசாலை.*

## சுமையாக

என் உயிரின் உறவே!
என் இரவின் நிலவே!
கொடிய பிரிவின் வழியில்
வலியுடன் தனியே நடக்கிறேன்.
கூடவே உன் நினைவுகளும்
என் துணையாக அல்ல
பெரும் சுமையாக.



*பெ.நந்தகுமார்*
*மன்னார் முள்ளிக்குளம்.*

## பணம்

மனிதனின் அன்பைக்கூட
மரணத்தால் வாங்க
வேண்டிய ஒரு சூழ்
நிலையை
மனிதனே உருவாக்கினான்
மானிடனே
பணமில்லாமல்
வாழ்க்கை இல்லை
அதற்காக பணமே
வாழ்க்கை என்று எண்ணி
விடாதே

*நிலா*
*கொக்குவில்.*



## மீண்டும் வராதா?

கனவாகிப்போன
என் காலங்களோடு
என் உணர்வுகளும்
புதைக்கப்பட்டு விட்டன
கனவாகிப்போன என்
காலங்கள் மீண்டும்
நிஜமாக வராதா காலனே
பதில்
சொல்...

*சி.சங்கர்.*

# கவிதைப் புனல்



## வாக்கு வங்கி

உன் இரத்த வங்கியை
எம் குருதியால்
நிறைத்து விட்டாய்
இப்போ

உன் வாக்கு வங்கியை
நிரப்பவா வருகின்றாய்
வாக்குக் கேட்டு?

உன்னால் நாம் வடித்த ஒரு
சொட்டுக் கண்ணீரும்
காயவில்லை கன்னங்களில்!
பின்

எந்த முகத்தோடு
வந்துனக்கு நாம் வாக்குப்
போடுவது? சொல்
உன்னிடம் பதிலிருந்தால்

*சுரேஷ்*
*தேனாள்.*

## நலம் தானா....?



நண்பா...! நீ.. நலமாவென்று
நாசூக்காய் கேட்டேன்? அப்போ
சொன்ன அப்பதிலால் நானும்
சோகத்தில்.. கல்லாய்ப்
போனேன்.

என்னதான் சொன்னான்? - அதை
எழுதிட எழுதுகோலும்
கண்ணீரில்... மூழ்கி சுனாமிக்
கடலெனக் குமுறுதையா.

வெள்ளரிப்பழத்தை ஒத்த
வியத்தகு தோலில் எந்தன்
உள்ளத்தைப் பறி கொடுத்தேன்
ஒரு தலைப்பட்சமாக

கல்வீடு, காரு, காணி
காசோடு பொருள், பண்டங்கள்
எல்லாமே பெற்று வாழ்வில்
இடர் அற, இமயம் ஏகி
நல்லறம் காணும் பொல்லா

நப்பாசை, நகரத்தீயுள்
கல்லறை ஆக்கி நித்தம்
கவிழ்த்திட பொட்டிப்பாம்பாய்..
சட்டியுள் கொதிக்கும் இந்த
சாம்பாரைப் பார்த்தா நீயும்
நலமது விசாரிக்கின்றாய்?

நண்பனே! நன்றாய்க்கேளும்
கைக்கூலி, பொய்த்தோலிற்குள்
காட்டேறிப் பசாசை ஏற்று
வைக்கோல் விழுந்த நாயாய்...
வரம் பெற்றேன்,
பெற்றசொத்தோ

கொல்லுது, என்னைப் பார்த்துக்
குமுறுது, எட்டாம் நகர
பள்ளத்துள் வீழ்ந்த எந்தன்
பயங்கர அனுபவத்தைச்
சொல்லிவிடு, தோழா! ஏழைத்

தோகையர் பெருமூச்சிற்குள்
தள்ளிடா வண்ணம் எங்கள்
தம்பியர், தங்கைமாரை
பெற்புயர் குணத்தைச் சார்ந்த
பூவையர் கரமே பற்றி

அற்புத சொர்க்கம் காண
அறிவுரை பகருவாயா?
நலமது கேட்ட நண்பா!
நாடியைத் தொட்டுப் பார்த்தேன்

நிலமையைத் தெரிந்து
கொள்ளும் நிச்சயம்
பதில் கிடைக்கும்.


*கே.எம்.அஸிஸ்.*
*சாய்ந்தமருது.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பளம் = கவர்ச்சி

'நீடஹா' தெலுங்குப் படத்தில் தமன்னா, நாக சைதன்யாவோடு கடற்கரைப் பாடல் காட்சியில் ஆடும் படு கவர்ச்சியான புகைப்படங்கள் வெளிவந்ததில் இருந்து, ஆந்திராவே அல்லாடிக் கிடக்கிறதாம். தங்கள் படத்திலும் இப்படி கவர்ச்சி மழையைப் பொழிந்து தள்ளுமாறு தெலுங்குப் படத் தயாரிப்பாளர்கள் தமன்னாவைக் கெஞ்சத் தொடங்கி விட்டனர். சம்பளத்தை எவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறீர்களோ அந்தளவுக்கு அதிக கவர்ச்சி காட்ட நான் தயார் என்று சொல்லியிருக்கிறார் தமன்னா.



# சந்தானம் 3



இன்றைய சினிமாவைப் பொறுத்த வரையில் நகைச்சுவை நடிகர்களில் முன்னணி நடிகராகத் திகழ்கிறார் சந்தானம். படத்துக்குப் படம் இவர் அடிக்கும் நக்கல் கலந்த நகைச்சுவையால் திரையரங்கமே அதிர்கிறது. அந்த வகையில் இரசிகர்களுக்கு இன்னும் அதிகளவு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் படம் தான் 'பட்டத்து யானை'

இதில் விஷாலுடன் இணைந்து நகைச்சுவையில் பின்னி இருக்கிறாராம் சந்தானம். அத்துடன் மேலும் ஒரு படி சென்று 'பட்டத்து யானை' படத்துக்காக தாத்தா, அப்பா, மகன் என மூன்று வேடங்களில் வந்து கலக்கி இருக்கிறாராம். பூபதி பாண்டியன் இயக்கி இருக்கும் இந்தப் படத்தில் விஷாலுக்கு ஜோடியாக ஆக்ஷன் கிங் அர்ஜுன் மகளான ஐஸ்வர்யா நடிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தெலுங்கில்



ஹன்சிகா

ஹன்சிகா நீண்ட இடை வெளிக்குப் பிறகு தெலுங்கில் புதிய படம் ஒன்றில் ஒப்பந்தமாகியுள்ளார். நாகார்ஜுனா நடித்த 'ஹலோ பிரதர்ஸ்' படத்தின் மீள்பதிப்புத்தான் இது. சௌந்தர்யா நடித்த வேடம், ஹன்சிகாவுக்கு, ரம்யாகிருஷ்ணா நடித்த கவர்ச்சியான வேடம், தமன்னாவுக்கு.

எஸ்.ஜே.சூர்யா
நடிக்கும் 'இசை' படம், முழு
இளையராஜாவின் வாழ்க்கை
படையாகக் கொண்டு எடுச்
வருகிறது. படத்தில் ஏ.ஆர்.
தோற்றத்தில் எஸ்.ஜே.சூர்ய
தாலும், இளையராஜாவின்
என அடித்துச் சொல்கிறார்
அறிந்த சிலர். இசைஞானி
யைத் தூக்கிவிட்டு, இசை
பெயராக வைத்துள்ளாராம்
இளையராஜாவை கடவு
இரசிகர்கள் வணங்கியது, ச
அடித்து ஒட்டியது என
வைப் பற்றிய பல்வேறு சுவ
சம்பவங்கள் இந்தப் படத்தி
ராமராஜன், மோகன் பே
கால நாயகர்களின் பெரும்
படங்கள் ராஜாவின் இசை
நாட்கள் ஓடின என்பதையு
படுத்தி இருக்கிறார் எஸ்.ஜே
கவிஞர் வைரமுத்துவுக்கும்,
ஜாவுக்கும் இடையே ஏற்ப
பாடுகள், மெல்லிசை மன்ன
எம்.எஸ்.வி.யுடன் இளைய
உள்ள உறவு போன்றவை
உண்டாம்.
ஒட்டுமொத்தமாக இள
வாழ்க்கையை அன்று முத
அப்படியே பிரதிபலிக்கும்
இருக்குமாம்.


# இதற்கும் போராட்டம்



சில்க்ஸ்சுமிதாவின் கதையை கன்னடத்தில் படமாக எடுத்து நடிகை வீணா மாலிக்கை துகில் உரித்துவிட்டனர். படத்தை முழுசாகப் பார்த்த கர்நாடக தணிக்கைக் குழுவினர் சிலுக்கு கூட இவ்வளவு ஆபாசமா நடிக்கவில்லையே? என்று கூறி பல காட்சிகளை அப்படியே வெட்டித் தள்ளிவிட்டார்கள். ஆனாலும் படக்குழுவினர் விடுவதாக இல்லை. சில்க்ஸ்சுமிதா பற்றிய கதையைக் கொண்ட 'தடேர்ட்டி பிக்சர்' என்ற ஹிந்திப்படத்தில் இதை விடவும் கவர்ச்சியான காட்சிகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி, நீக்கப்பட்ட காட்சிகளை இணைப்பதற்கு போராடிக் கொண்டிருக்கின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காஜால் உஷார்



முன்பெல்லாம் வாய் தவறிப் பேசி வம்பில் மாட்டிக்கொண்ட காஜல் அகர்வால் இப்போது உஷாராகவே பதில் சொல்கிறார். ஹிந்தி, தெலுங்கு, தமிழ் என மூன்று மொழிகளிலும் நடிக்கிறீர்களே, எந்த மொழி ரொம்பக் கஷ்டம்? என்று சமீபத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு என்னை மாட்டி விடத்தானே இந்தக் கேள்வி? என சிரித்து மழுப்பி உள்ளார்.



# மகனுக்காக....

தெலுங்குப் படமான 'பிருந்தாவனம்' படத்தின் தமிழ் உரிமையை மகனுக்காக வாங்கி வைத்துள்ளார் நடிகர் விஜயகாந்த். இந்தப்படத்தில் நானும் நடிக்கலாமா? எனவும் ஆலோசித்து வருகிறாராம். விஜய்க்கு ஒரு செந்தூரபாண்டி, சூர்யாவுக்கு ஒரு பெரியண்ணா எனக் கை கொடுத்த விஜய்காந்த் இப்போது மகனுக்காகவும் களமிறங்குகிறார். விரைவில் இந்தப் படத்தின் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் விஜயகாந்தை திரையில் பார்க்கும் பாக்கியம் இரசிகர்களுக்கு கிட்டப்போகிறது.



# வடிவேலுவுக்கு 42 மனைவிகள்

தமிழக சட்டசபைத்தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த்திரையுலகில் இருந்து ஓரங்கட்டப்பட்ட வடிவேலு, மீண்டும் நாயகனாக சினிமாவுக்குள் புகுந்துள்ளார். வைகைப்புயல் வடிவேலு இப்போது நடித்து வரும் புதிய படம் 'ஜெகஜால புஜபல தெனாலிராமன்'.

இதன் முதல் கட்டப் படப்பிடிப்பிற்கு ஏ.வி.எம் ஸ்டூடியோவில் பிரமாண்டமான காட்சியமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதில் தெனாலிராமன் தோற்றத்தில் வடிவேலு நடித்த முதல் காட்சி படமாக்கப்பட்டுள்ளது.

இந்தக்காட்சியில் அவருக்கு 42 மனைவிகளும், 56 பிள்ளைகளும் இருப்பது போன்று கதாபாத்திரங்களை வைத்துப் படமாக்கி உள்ளனர்.

குறிப்பாக இந்தப்படத்திற்காக பிரத்தியேக பயிற்சிகளை எடுத்துக் கொண்ட பின்னரே படப்பிடிப்பில் கலந்துகொண்டார் வடிவேலு. முதல்நாள் படப்பிடிப்பு முடிந்தவுடனேயே தன் அம்மாவை பார்ப்பதற்காக மதுரைக்குச் சென்று விட்டாராம்.



# உருவம் ஏ.ஆர்.ரஹ்மான் - உயிர் இளையராஜா

...ர்யா இயக்கி
... முழுக்க முழுக்க
...க்கையை அடிப்
...எடுக்கப்பட்டு
...ஆர்.ரஹ்மான்
...சூர்யா நடித்திருந்
...வின் கதைதான் அது
...றார்கள் விவரம்
...னி என்பதில் ஞானி
...சையை மட்டும்
...ராம் எஸ்.ஜே.சூர்யா.
...டவுளாக நினைத்து
..., சுவரொட்டி
...ளைய...ஜா
...சுவாரசியமான
...த்தில் இருக்கிறதாம்.
... போன்ற அந்தக்
...நம்பாலான
...சைக்காகவே பல
...தயும் காட்சிப்
...ஜே. சூர்யா.
...ம், இளையரா
...ப்பட்ட முரண்
...ன்னர்
...ளயராஜாவுக்கு
...வ கூட படத்தில்

...இளையராஜாவின்
...தல் இன்று வரை
...ம் வகையில் படம்



# கவர்ச்சிக்கு கும்பிடு

'கற்றது தமிழ்', 'அங்காடித்தெரு' படங்களில் இழுத்துப் போர்த்திக் கொண்டு குடும்பப் பாங்காக நடித்தார் அஞ்சலி. பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று பலரும் சொல்லும் அளவுக்கு அந்தப் படங்கள் அமைந்தன.

திடீரென என்ன ஆனதோ தெரியவில்லை. ஆடைகளைக் குறைத்து கவர்ச்சி(?) காட்டினார். தொடர்ந்து இரண்டு, மூன்று படங்கள் கவர்ச்சி காட்டியும் 'கற்றது தமிழ்', 'அங்காடித்தெரு' படங்களுக்குக் கிடைத்தது போல பெரிய வரவேற்புக் கிடைக்கவில்லை.

அவருடைய தொப்பையும், கட்டுக்கோப்பற்ற உடலும் இரசிகர்களுக்குப் பிடிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் சிறிய நமீதா போலவே இருந்தார் அஞ்சலி. இதைக்கண்டு நொந்துபோன அஞ்சலி, கவர்ச்சியாக நடிக்குமாறு தனக்கு ஆலோசனை வழங்கியவர்களிடம் புலம்பித் தீர்த்துவிட்டார்.

இதனால் இனிமேல் குடும்பப் பாங்கான வேடத்தில் மட்டுமே நடிப்பது என முடிவு எடுத்துள்ளார் அஞ்சலி. சில மாதங்களுக்கு முன்பு வெளியான 'வத்திக்குச்சி' படத்திலும் அப்படித்தான் நடித்தார். தற்போது கவர்ச்சி காட்டி நடிக்கும்படி இரண்டு வாய்ப்புகள் வந்ததாம். அவர்களைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்ட அஞ்சலி, குடும்பப் பாங்கான பாத்திரமாக இருந்தால் சம்பளத்தைக் கூட குறைத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடி மறைக்கப்பட்டிருக்கும் யோசனைக்கு மதிப்பு

மேம்பாட்டுக்கான ஒரு யோசனையை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். பிறருக்குச் சொல்ல வேண்டும். அப்போது தான் அந்த யோச்னையைச் சொன்னதற்காக உங்களுக்கு பெருமை, பதவி உயர்வு, ஊதிய உயர்வு, போனஸ் போன்ற எல்லாம் கிடைக் கும்.

யோசனைகளை வெளிப்படுத்துவதற்கு மூன்று சுலபமான வழிகள் உள்ளன. அந்த மூன்றும் மிகமிக அவசியமானவை. பின்னால் கொடுக்கப்பட்டுள்ளவைகளை திரும்பத் திரும்பப் படியுங்கள். பாடம் செய்யுங்கள். அவற்றைப் பற்றிச் சிந்தியுங்கள். அதை எப்போதும் திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வாருங்கள். நினைவுபடுத்தும் ஒரு அட்டையில் இவற்றை எழுதிக் கொண்டு அடிக்கடி அதைப் படியுங்கள். திரும்பத் திரும்பப் படியுங்கள்.

ஏன் என்றால் பின்வரும் மூன்று நிலைகளும் சீக்கிரம் செல்வந்தராவதற்கு அவசியமான நடவடிக்கைகள் ஆகும்.

1. சிந்தியுங்கள்
2. எழுதி வையுங்கள்
3. வெளிப்படுத்துங்கள்



## சுடர் ஒளி வாசகர்களே!

குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


களைப் பற்றி சிந்திப்பது கிளர்ச்சியும், எழுச்சியும் ஏற்படுத்துவதாகும். உங்கள் சிந்தனையானது புதிய குறிக்கோளை நோக்கி புதிய பரிணாமத்தில் அமைந்திருக்கும் சிருஷ்டித்தன்மை மிக்க ஒரு மனிதராக நீங்கள் தோற்றம் கொள்ளத் தொடங்கி விடுவீர்கள் ஒவ்வொரு புதுக் கருத்தும் ஒவ்வொரு புது யோசனையும் - அது சிறிய அளவு மேம்பாட்டுக்கானதாக இருந்தால் கூட உங்களுடைய வெற்றிக்கண்ணோட்டத்தை - வெற்றி மனோபாவத்தைக் கட்டிக்காத்து நிற்கும். உங்கள் பேச்சு - பார்வை - செயல் - எல்லாவற்றிலும் வெற்றித்தன்மை ஜொலிக்கும்.


நீங்கள் சிந்திக்கத் தொடங்கும் ஒவ்வொரு புதிய கருத்தும் கூடுதலான யோசனைகளுக்கு வழி வகுக்கும கூடுதலான வெற்றிகளுக்கு வழி திறக்கும்.

எல்லாருடைய சிந்தனைகளுமே எண்ணச் சங்கிலிகள் போல் ஒன்றுக் கொன்று தொடர்பு கொண்டவை. எப்படி என்பதைத் தெரிந்து கொண்டால் அது சுலபம்.

எப்படி என்பதை இங்கு பாருங்கள்

### I.சிந்தியுங்கள்!

மேம்பாட்டுக்கான யோசனை மேம்பாட்டுக்காகச் சிந்திக்கும் போது தொடர் சிந்தனைகள் உருவாகும் என்பது முக்கிய உண்மை. ஒரு கருத்து என்பது இன்னொரு கருத்துடன் தொடர்பு கொண்டதாக இப்படியே தொடர்ந்து ஏற்பட்டுவரும் தொடர் தொடராக வரும் ஒவ்வொரு யோசனையிணையும் ஒவ்வொரு கருத்தையும் நீட்டி விரிவாக்குங்கள். தொடர்ந்து சிந்தித்து சிந்தித்து யோசனைகளின் எண்ணங்களின் கருத்துகளின் தொடர் சங்கிலியாக உருவாக்குங்கள்.



### எப்படி?

முன்பு கொடுக்கப்பட்ட 61 மந்திரக் கேள்விகளுடன் உங்களுக்குத் தோன்றுகிற யோசனைகளை உரசிப் பாருங்கள். பொருத்திப் பாருங்கள் அப்போது - 'பளிச் என்று புது யோசனைகள் உருவாகும்.

ஆம் அது தான் சரி முதலில் 61 மந்திரக் கேள்விகளைக் கொண்டு யோசனைகளை- எண்ணச்சுடர்களை - உருவாக்கிக் கொள்ளுங்கள். பிறகு எண்ணச் சுடர்களை உருவாக்கும் அதே மந்திரக் கேள்விகளைக் கொண்டு- உருவாக்கப்பட்ட யோசனைகளை வைத்து நீங்கள் மறுபடியும் கேள்விகளைக் கேளுங்கள். அதன் விளைவுகளை நம்ப முடியாத அதிசயமாக இருக்கும். அப்போது புதுப்புது கருத்துகள் யோசனைகளை உருவாக்கித் தரும் சீரிய முறை ஒன்று உங்கள் கைக்குள் பிடிபட்டிருப்பதை நீங்கள் உணர்ந்து விடுவீர்கள். அதுவே உங்களிடம் ஒரு உற்சாகத்தை நீங்களே உணர்ந்து புதுக் கருத்துக்களை புது யோசனைகளை விரிவாக்கலாம். மேலும் மேலும் உருப்படியான யோசனைகளை உற்பத்தி செய்யும் ஊற்றுக்கண் போல அது விளங்கும்.

ஆக நீங்கள் சீக்கிரம் செல்வந்தராகுவதற்குரிய முதல் படி- அவசியமான படி எது? சிந்தித்தல் யோசித்தல் இது பற்றி 12 மற்றும் 13 ஆவது அத்தியவசியங்களில் விரிவாகக் கூறப்பட்டது. முன்பு சொன்ன அந்த விஷயங்களை மீண்டும் சொல்வதற்குப் பதிலாக இப்போது அந்த 12 13 அத்தியாயங்களை மீண்டும் படயுங்கள் ஏன் என்றால் அந்த இரு அத்தியாயங்களும் க வெற்றிகரமான முறையில் எப்படி சிந்திப்பது என்பதைக் கற்றுக் கொடுக்கின்றன. இரு அத்தியாயங்களும் 61 மந்திரக் கேள்விகளைக் கொடுக்கின்றன. எந்த ஒரு அம்சமானாலும் அதை மேம்படுத்துவதற்கான யோசனைகளைக் கண்டுபிடிக்கவும், உருவாக்கவும் ஆன வழிகளை அந்த மந்திரக் கேள்விகள் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்றன. சிந்திப்பதை-யோசிப்பதை அந்த மந்திரக் கேள்விகள் எளிதாக்குகின்றன.

### 2. எழுதி வைத்து விடுங்கள்!

உங்களுக்கு ஒரு புதுக்கருத்து, புது யோசனை, புதுத் திட்டம் தோன்றிய உடன் அதை எழுதி வைத்து விடுங்கள். மனதில் தோன்றும் அந்த ஒரு யோசனையை வளர்க்க -விரிவாக்க- நிறைவு- செய்ய- முயற்சிக்க வேண்டாம். முதலில் யோசனை தோன்றும் போதே எந்த ஒரு புதுக் கருத்தாக இருந்தாலும் அது அரை குறையாக இருந்தாலும் கூட- அந்தக் கருத்து பத்திரமாக இருக்கக் கூடிய இடம் ஒரு காகிதம் தான்.

காகிதத்தில் உங்கள் யோசனையை எழுதி வைத்த பிறகு அதை மீண்டும் படித்துப்பார்க்கலாம். அதில் மனத்தைச் செலுத்தலாம். அந் தக்கருத்தை- யோசனையை எப்படி யெல்லாம் மேம் படுத்த முடியும் என்று யோசிக்கலாம். உங்களுக்கு உதித்த யோசனைகளைப் பெற 61 மந்திரக்கேள்விகளுடன் பொருத்திப்பார்க்கலாம். இவ்வாறு உங்களிடம் உதயமாகியுள்ள எல்லாக் கருத்துக்களையும் புது யோசனைகளையும் எழுதி வைத்து விடுங்கள்.

*(கேள்விகள் அடுத்த வாரமும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரிஸ் டைரி



**க**ட்டாய மதச்சடங்கான கந்துவெட்டுதலால் பாதிக்கப்பட்ட சோமாலிய நாட்டு மொடல் வேரிஸ் டைரி, 1965இல் கல்கயாவில் பிறந்தவர். தன்னுடைய 13ஆவது வயதில் தன்னைவிட பல வயதுகள் கூடியவரை மணக்க வற்புறுத்தப்பட்டதால் குடும்பத்திலிருந்து விலகி தன்னுடைய மூத்த சகோதரியுடன் வாழ்ந்து வந்தவர். 1987களில் தன்னுடைய மொடலிங் துறையில் நுழைந்த இவர் 1990இல் கட்டாயப் பாலுறுப்பு அறுவையால் பாதிக்கப்பட்டவராக உலக அரங்கில் அறியப்பட்டு; பெண்களின் உரிமைக்காக உண்மையுடன் செயற்பட்டு வரும் ஒருவராவார்.

Desert flower-1998 Desert dawn-2004
Letter to my mother-2005 Desert children-2007

உட்பட்ட பல நூல்களையும் எழுதியிருக்கிறார். மிகவும் பிரபல்யமான Desert flower (பாலைவனப் பூ) பிரான்ஸ்,ஜேர்மனி, இஸ்ரேல்,ஸ்பெயின், உள்ளிட்ட 20 நாடுகளில் வெளியாகியிருந்ததோடு முழு நீளத் திரைப் படமாகவும் தயாரிக்கப்பட்டு பல்வேறு விருதுகளையும் பெற்றுக் கொண்டுள்ளது.

பெண்களின் உரிமைக்காக Desert flower, ppr போன்ற அமைப்புக் களை நிறுவி செயற்பட்டு வருகிறார். 1997ஆம் ஆண்டு கந்துவெட்டு தலிற்கு எதிரான ஐ.நாவின் சிறப்புத்தூதுவராக நியமிக்கப்பட்டார். 2010ஆம் ஆண்டு ஆபிரிக்க ஒன்றியம் இவரை சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்குமான தூதுவராக நியமித்திருந்தது.

வேரிஸ் டைரி பெண்களிற்காக குரல் கொடுக்கும் ஒரு பெண்.

# மஞ்சளிற்கு நிகர் மஞ்சள் தான்



**ப**ளிச் சென்றிருக்கின்ற முகம் வேண்டுமே என்று ஏங்காத எங்கள் சகோதரிகள் இல்லை. வெண்மை என்பது தான் பளிச்சென்றிருப்பதன் அர்த்தம் என்பது தவறு. எத்தகைய நிறமுடையவர்களாக இருந்தாலும் பார்ப்பதற்கு சுத்தமாக இருப்பதுவே இதன் அர்த்தமாகும். கருமையும் அழகானது தான். அதன் உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். முகம் இயல்பாக இருப்பதை நேர்த்தியாக இருப்பதை நாம் அழகு என்று சொல்லலாம். அப்படி இருக்க எல்லோரிற்கும் தான் ஆசை. அப்படி ஆசைப்படுபவர்கள் கீழுள்ள முறைகளை பயன்படுத்துவதால் இயல்பான அழகினைப் பெற்றுக்கொள்ளலாம்.

* மஞ்சளை பயிற்றம் மாவுடன் கலந்து பூசிக் குளித்து வந்தால் முகத்தின் சுருக்கம் நீங்கும்.
* முகத்தோல் சொரசொரப்பாக இருந்தால் மஞ்சளுடன் துளசியை அரைத்துப் பூசலாம்.
* கழுத்துப்பகுதி, கணுக்கால்ப் பகுதி என்பன அதிகம் இருட்டாக இருந்தால் மஞ்சளோடு தயிரை சேர்த்துப் பூசிவர இருட்டுத் தன்மை குறையும்.
* மஞ்சள் கலந்த நீராவியால் முகத்தை கழுவுங்கள். அதுகூட சிறந்த பலனைத் தரும்.
* மஞ்சளோடு எலுமிச்சையை சேர்த்துப்பூசி வர முகப்பரு அடை யாளங்கள் மறையும்.

# யார் சொல்வதோ...?

**யா**ழ்ப்பாணத்திலிருக்கின்ற ஒரு உயர் கல்விக் கூடத்திற்கு ஒரு அலுவலாக நான் செல்லவேண்டியிருந்தது. திங்கட்கிழமையாக இருந்ததால் பஸ்ஸிலும் ஒரே கூட்டம். இருந் தாலும் ஒருமாதிரி ஏறிக்கொண்டேன். போக வேண்டிய இடம் யாழ்ப்பாணத்தின் சொத்தாக இருக்கின்ற ஒரு இடம். ஆதலால் நேரம் தவறாமையை கடைப்பிடிக்க வேண்டுமே நேரத்திற்கு போய்விட வேண்டுமே என்ற அவசரத்தில் எதையும் சிந்திக்காமல் பயணித்துக்கொண்டிருந்தேன்.

இறங்க வேண்டிய இடம் வந்தது. சாக்குக்குள் இருந்து வெளியே எடுத்துப்போட்ட தக்காளிப்பழம் போல என்னை எறிந்துவிட்டு மன்னிக்கவும் இறக்கிவிட்டு பஸ் கிளம்பியது. நானும் என்னுடைய வேலைக்காக நடையைக் கட்டினேன். வரவேண்டிய இடத்திற்கு வந்துவிட்டேன். இப்போது நான், சந்திக்க வேண்டிய நபரைக் காணவேண்டும். முன்னரே நான் இது தொடர்பாக அவரிடம் நேர அனுமதி பெற்றிருந்ததால் அது ஒரு பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. சரி அந்த அப்பொயின்மென்ற் ஐ எடுத்துக்கொண்டு போவோமென்று தேடினால் அதைக் காணவில்லை. நானும் தேடித் தேடிக் களைத்துப் போய்விட்டேன். இப்போது என்ன செய்வது...? பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. சரி கொஞ்சம் சாப்பிட்டு விட்டு மிகுதியை சிந்திப்போம் என்று அருகிலிருந்த சிற்றூண்டிச் சாலைக்குள் நுழைந்தேன்.

அது காலை வேளை என்பதால் சற்றுப் பரபரப்பாகவே காணப்பட்டது. கல்விக் கூடம் என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன். மாணவர்கள் மட்டுமல்லாது ஊழியர்களும் ஒருசில கல்விமான்களும் அங்கு காணப்பட்டனர். மாணவர்கள், மாணவிகள் சுறு சுறுப்பாக ஓடிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு பெண்மணி அங்கு வந்தார். கண்ணுக்கு குளிர்ச்சியாகத் தான் இருந்த அவர் எங்களின் பண்பாட்டின் ஒரு அடையாளமான சேலையை அணிந்திருந்தார். வந்தவர் தன்னுடைய வேலையை முடித்துக்கொண்டு போய் விட்டார். அவரும் என்னைப் போல் ஏதோ அலுவலாக வந்திருக்கக் கூடும் என்று நினைத்தபடி நான் சந்திக்க வேண்டிய பெரியவரின் பகுதிக்குச் சென்றேன்.

அவரையும் சந்தித்து அலுவல்களை முடித்துக் கொண்டு திரும்புகின்ற போது மண்டபம் ஒன்றிலிருந்து வகுப்பு முடிந்து மாணவர்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் போனதும் போவோம் என்று எண்ணி நான் தாமதித்து நின்றுவிட்டு நான் வெளியேறவும், நான் முன்னர் சிற்றூண்டிச்சாலையில் கண்ட பெண்மணி வந்து உள்ளே புகவும் தருணம் சரியாகவிருந்தது. திகைத்துப்போய் நான் திரும்பிப் பார்க்க அந்தப் பெரியவர் சொன்னார் இது எங்கட புது மெம்பர்.

நிச்சயமாக நல்ல விடயம் தான். கல்விகற்ற இளைஞர்கள் இவ்வாறு பொறுப்புக்களை ஏற்பது நல்லதே. ஆனால் இடத்திற்கு பொருத்தமாக நடந்து கொள்ளவுமல்லவா பழகிக் கொள்ள வேண்டும். எங்களின் நடை உடைகள் மற்றவர்களை பாதிக்காத வரையில் நடந்து கொள்ள்வும் வேண்டுமல்லவா... விரும்பியவாறு வர முடியாது சேலை தான் கட்டி வர வேண்டும் என்பதற்காக பிறகு அதில் முடிச்சுக்கள், முறுக்கல்கள் எல்லாம் போட்டு வர வேண்டிய தேவையில்லையே. ஒரு கல்விக் கூடத்தின் மரியாதையை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மாணவர்களிற்கு மட்டுமன்றி அதன் கல்விசார் உறுப்பினர்களிற்கும் உண்டல்லவா... கல்வி கற்பதும் இளைஞர்கள் கற்பிப்பதும் இளைஞ சந்ததியாய் இருக்கின்ற போது மாணவர்கள் கல்வியில் எப்படி முழுக் கவனத்தையும் காண்பிக்க முடியும். பின்னர் மாணவர்கள் எங்களை மதிக்கவில்லை என்று எவ்வாறு சொல்ல முடியும்...?



சகோதரிகளே... நீங்கள் பணிபுரியும் இடங்களிற்கு ஏற்றவாறு நடந்துகொள்ளப் பழகுங்கள். உங்களினுடைய தனிப்பட்ட இடத்தில் அது வீடோ... உங்களினுடைய அறையோ அங்கு உங்கள் விருப்பத்திற்கேற்ப நீங்கள் நடந்து கொள்ளலாம். ஏனெனில் அது உங்களினுடைய இடம். ஆனால் வெளியே நீங்கள் புறப்படும் போது நீங்கள் செல்லும் இடத்திற்கு ஏற்ற மாதிரி இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். உங்களினுடைய வீணான ஒப்பனைகள், அலங்காரங்களைவிட உங்களினுடைய பழக்கவழக்கங்களும் நடையுடை பாவனையுமே உங்களிற்கு உண்மையான உறுதியான வெற்றியைத் தேடித்தரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் கெட்டவன்

> நான் நல்லவனுக்கு நல்லவன்... கெட்ட வனுக்குக் கெட்டவன். எண்டுறது தான் அந்த பஞ்ச் வசனம்... அதிலை முதல் ரெண்டு சொல் லை நான் சொல்ல. மற்றதை என்ர பரிவாரங்கள் சொல்லுங்கள்.

## பம்பலி பரமசிவம்

நான் எடுத்த மோட்டார் சைக்கிளுக்கு பதிவு செய்து 'நம்பர்' வந்திட்டுது தெரியுமோ?

முந்தி நான் யாரோடையும் பிரச்சினை யெண்டால் சொல்லுற ஒரு 'தடாலடி' வசனம் இருக்குத் தெரியுமோ?

'நான் நல்லவனுக்கு நல்லவன்... கெட்ட வனுக்குக் கெட்டவன்' எண்டுறது தான் அந்த 'பஞ்ச' வசனம்.. அதிலை முதல் ரெண்டு சொல் லை நான் சொல்ல, மற்றயதை என்ர பரி வாரங்கள் சொல்லுங்கள்.

நான், 'நான் நல்லவனுக்கு......'. என்று தொடங்க மற்றவர்கள் 'நல்லவன்' என்று சொல்லி முடிப்பீனம். அதே போல நான், நான் 'கெட்டவனுக்கு என்று.......' என்று சொல்லத் தொ டங்க, மற்றவையள் 'கெட்டவன்' என்று சொல்லி முடிப்பீனம். பிறகு என்னைக் கண்ட வுடனேயே, "டேய்! நல்லவன் வாறார்" எண்டு ஒரு, பகுதியினரும், டேய்! 'கெட்டவன் வாறார்'' எண்டு ஒரு பகுதியினரும், சொல் லுறது வழக்கமாய்ப் போயிற்று. இந்த அவசர உலகிலை எல்லாத்தையும் முழுமையாகச் சொல்லிக் கொண்டு நிக்க ஏலுமே? மீதி சொல்லத் தேவையில்லை அதனை அவர்களும் நானும் புரிந்து கொள்ளுவோம்..... ஒரு புரிந் துணர்வு அடிப்படையிலைதானை, ஆளை ஆள் ஒரு பேர்வைச்சுக் கூப்பிடுறது....

இப்ப நான் சொல்ல வந்த விசயம் என்னவெண்டால் என்ரை இந்தப் பிந்தின பேரின்ரை அடிப்படையிலைதான் என்ரை மோட்டர் சைக்கிள் நம்பர்' தொடங்குது..... ஓம் (BAD) சீரிசிலை தான் என்ரை 'நம்பர்' தொடங்குவது.... அதிலை எனக்கொரு சந் தோசம்... இது எல்லாருக்கும் கிடைக்காது. நான் 'குட்' ஆனவர்களுக்குக் 'குட்....பாட்' ஆனவர் களுக்கு 'பாட்...' அதை வைச்சே எனக்கு (BAD) 'சீரிஸ் நம்பர்' தந்திட்டீனம்.

இப்ப நான் செத்த வீடு கலியாண வீடுகளுக்கு 'மோட்டார் சைக்கிளிலை' தானை போறது. இப்ப ஒருத்தரும் "என்னை என்னத்திலை வந்தனீங்கள்?" எண்டு கேக்கிறதில்லை..... நான்தான் வலியப் போய் "நீங்கள் என்னத்திலை வந்தனீங்கள்?" எண்டு கேட்டுப் போட்டு, அவை பதில் சொல்லுறதுக் கிடையிலையே "நான் மோட்டார் சைக்கிளிலை வந்தனான்'' எண்டு சொல்லிப் போடுவன்..... அதிலை, அப்படிச் சொல்லுற திலை, ஒரு சுகம் இருக்குது. "மோட்டார் சைக்கிளிலை வந்து போறதும் ஒரு சுகம் தான்."

முந்தி நடந்து திரியேக்கை போற வாற வழியிலை இருக்கிற எல்லாக் கல்லையும், கோயிலிலையும் ஒரு கும்பிடு போடுறனான். பிறகு உழக்கிற சயிக்கிள் எடுத்தாப் போல எட்ட எட்ட ஒரு கோயிலிலை இறங்கிக் கையெடுத்துக் கும்பிடுறனான். கொஞ்சம் களைப்பு ஆறின மாதிரி இருக்கும். இப்ப மோட்டார் சைக்கிள் எடுத்தாப் போல, ஒரு கோயிலிலையும் நிப்பாட்டிற தில்லை. கைதடி கழிஞ்சு போற தெண்டால் அதிலை அந்தப் பிள் ளையார் கோவிலிலை ஒரு கும்புடு..... திரும்பி வரேயிக்கை ஒரு கும்புடு. இப்ப மோட்டார் சைக்கிள் எடுத்தப் போல வழியில எந்தக் கோயில் இருக்குது... எந்தக் குளம் இருக்குது எண் டதே தெரியுதில்லை.

கொஞ்ச நாளிலை இந்த மோட்டார் சைக்கிளை நான் மாத்தப் போறன். அப்ப MAD 'சீரிஸ்' நம்பர் வந்திடும். எனக்கு நல்ல பொருத்த மாக இருக்கும். அப்ப நான் நல்ல வடிவாக மோட்டார் சயிக்கிள் ஓடவும் பழகியிருப்பன்.

அந்த மோட்டார் சைக்கிளில் ஓடித் திரிஞ்சாப் பிறகு, நான் ஒரு புது மோட்டார் சைக்கிள் எடுக்கிற ஐடியா இல்லை... றோட்டு வழிய 'மோட்டார் சைக்கிள்கள்' நிறைஞ்சு வழியுதுகள்... அப்படி ஒண்டு எடுக்கிற தெண்டால் SAD 'சீரிஸ்' வந்த பிறகுதான்.

## மீண்டும் தொடங்கியது பூலோகம்



ஜெயம்ரவி– த்ரிஷாவின் நடிப்பில் தற்போது வேகவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது பூலோகம். வட சென்னையில் பிரபலமாகத் திகழ்ந்த குத்துச் சண்டை வீரன் ஒருவனின் கதை தான் இந்தப் படம்.

இதற்காக பிரத்யேக பயிற்சிகளையும் எடுத்துக் கொண்டார் ஜெயம் ரவி. பாதிப் படம் முடிவடைந்த நிலையில் பைனான்சியர் பிரச்சினை ஏற்பட்டதால் படப்பிடிப்பு நிறுத்தி வைக்கப்பட்டது. இதனையடுத்து ஜெயம் ரவியும், த்ரிஷா அடுத்த படங்களில் நடிக்க சென்றனர். ஆனால் மீண்டும் பைனான்சியர் ரெடியான போது, ரவி– த்ரிஷாவின் கால்ஷீட் கிடைக்கவில்லை.

இந்நிலையில் சில மாதங்கள் அவர்களுக்காக காத்திருந்து தற்போது மீண்டும் படப்பிடிப்பை தொடங்கி உள்ளனர். இதற்காக சென்னையிலுள்ள பிரசாத் லேப்பில் பிரமாண்ட செட் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இந்த செட்டில் மொத்தம் 40 நாள் படப்பிடிப்பு நடத்த திட்டமிட்டுள்ளனர். வட சென்னையில் வாழ்வியல் முறைகள், வட்டார வழக்கங்களை மையப்படுத்தி இந்தக் கதையை எடுக்கிறார்களாம்.

## சின்னத்திரையிலும் நடிப்பேன்: சமந்தா அதிரடி



தற்போது தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கும் சமந்தா, சின்னத் திரையிலும் கால்பதிக்க உள்ளாராம். தெலுங்கில் ஓரளவு கிளாமராக நடித்தாலும், தமிழில் தனக்கென்று உள்ள கட்டுப்பாடுகளை மீறாமல் நடித்து வருகிறார்.

இந்நிலையில் சின்னத்திரையில் நல்ல கதைகள் கிடைத்தாலும் நடிப்பேன் என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், தென்னிந்தியாவில் தான் சினிமாவில் நடிப்பவர்கள் சின்னத் திரையில் முகம் காட்டினாலே மட்டமாக நினைக்கிறார்கள். ஆனால் பாலிவுட்டில் அப்படியில்லை. அமீர்கான், சல்மான்கான் போன்ற முன்னணி ஹீரோக்களே டி.வியில் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி வருகிறார்கள். டிவியில் முகம் காட்டுவதால் சினிமாவில் அவர்களுக்கு யாரும் சான்ஸ் தர தயங்குவதில்லை. அதனால் எனக்கு நல்ல கதைகள் கிடைத்தால் டி.வியில் நடிப்பேன்.

அப்படி நடித்து எதிர்வரும் காலங்களில் தென்னிந்திய நடிகர்-நடிகைகளும் சினிமா-சின்னத்திரை என இரண்டு துறைகளிலும் அங்கம் வகிக்கும் நிலைமையை ஏற்படுத்துவேன் என்கிறாராம் சமந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதீ அரசியல்

## -இந்தியா :இளவரசனின் மரணம் பற்றிய பார்வைகள்-

ஊரவன்



**மிக அமைதியாக இருந்த அந்தத் தண்டவாளப் பாதை திடீரெனக் காகங்களின் வருகையோடு விழித்துக் கொள்கிறது. கூட்டம் கூட்டமாக அந்தக் காகங்கள் எதையோ கொத்திக் குதறிச் சுவைத்துக் கொண்டிருப்பது என்ன என்று தற்செயலாக எட்டிப் பார்த்தவர்களின் அடிவயிறு பற்றியெரிகிறது. அது இளவரசனின் உடல். நீல நிற ஜீன்ஸும், வெள்ளை நிற சேர்ட்டும் அணிந்திருந்த அவனது உடல் முகம் சிதைந்து குப்புறக் கிடக்கிறது. ஓலம் அந்தக் கிராமத்தின் மூலை முடுக்கெல்லாம் முளைக்கிறது. ஷாஜகான் முதல் ரோமியோ வரை காதலுக்காக அடையாளப்படுத்தப்படுவோரில் ஒருவனாக இளவரசனும் அன்றைய பொழுதில் இணைந்திருந்தான்.**

**2012** நவம்பர் மாதம் 12 ஆம் நாள் முதல் தருமபுரியை மையமாக வைத்து சாதி வெறியர்கள் கட்டவிழ்த்து விட்ட வெறியாட்டங்களை எந்தவித மனச்சாட்சியும் இன்றி தமிழகம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. சினிமாக்களில் காதலர்களைக் கொண்டாடும் இளையோர் கூட்டமும் காதலின் பெயரால் நடைபெறும் வன்முறை வெறியாட்டங்களைக் கண்டுகொள்ளவில்லை. வடதமிழகம் சாதி வெறி பிடித்தவர்களால் கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக எரிந்து கொண்டிருக்கிறது. இத்தனைக்கும் காரணம் இளவரசன் -திவ்யா காதல் தான். அயல் கிராமங்களைச் சேர்ந்த இந்தச் சிறுசுகள் இரண்டும் பிறப்பால் வேறுவேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள். மனங்களால் ஒன்றுபட்டுப் போன அவர்களுக்குச் சாதிப் பிளவு ஒருபொருட்டாகவே தெரியவில்லை. ஆனால், சாதியை வைத்தே அரசியல் செய்யும்சிலகட்சிகள்இந்தக்காதலை அவ்வளவு எளிதில் விட்டுவிடத் தயாராகவில்லை. திவ்வியா வன்னியர் சாதியைச் சேர்ந்தவர். எனவே ஒரு வன்னியர் சாதியில் பிறந்த பெண் எப்படி தலித் ஒருவனை மணம் முடிக்கலாம் என்று, வன்னிய மக்களிடையே சாதி அரசியல் செய்தது பாட்டாளி மக்கள் கட்சி. சாதியின் பெயரால் ஊர் இரண்டானது. கலவரம் வெடித்தது. ஆனாலும் இளவரசனுடன் வாழ்ந்தே தீருவேன் என்று திவ்யா புறப்பட்டாள். எனினும் சில நாள்களில் சாதி வெறியர்களின் ஏவுதலில் திவ்யாவின் தந்தை தற்கொலை செய்யக் கலவரத் தீ இன்னும் கொழுந்து விட்டெரிந்தது.

சில மாதங்கள் கழித்து திவ்யாவின் தாய்க்கு உடல்நிலை சரியில்லை என்று தகவல் வரத் திவ்யா துடித்துப் போனாள். தாயைப் பார்த்துவிட்டு வர இளவரசனின் சம்மதத்தோடு கிளம்பினாள். ஆனால் அதன் பின்னர் அவள் இளவரசனிடம் திரும்பி வரத் தாயும், சாதி வெறியர் களும் அனுமதிக்கவில்லை. திவ்யாவை அடைத்து வைத்துள்ளார்கள் என்று இளவரசன் கொடுத்த முறைப்பாட் டின் அடிப்படையில் வழக்குத் தொடரப்பட்டது.

### சாதி தின்ற காதல்

மக்களின் மனசாட்சி சாதியத்தினால் மரத்துப்போன நிலையில் இளவரசன் திவ்யா காதல் நிர்க்கதியாக நின்றது. சாதி வெறிபிடித்த வன்னியர்களின் கையில் அவர்களது காதல் கதறியழுதது. எனினும் கடைசியாக இளவரசன் சாவடைவதற்கு இரு நாள்கள் முன்னதாக நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்ட திவ்யா நான் அம்மாவுடன் தான் இருக்கப் போகிறேன். இளவரசனுடன் இல்லை என்று கண்ணீரோடு சொன்னாள். அந்தக் கண்ணீர் அவள் சொல்வது உண்மையில்லை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தது.

என் திவ்யா எப்படியும் என்னிடம் வருவாள் என்று அதன் பின்னரும் நம்பிக்கையோடு சொல்லிக் கொண்டிருந்த இளவரசன் திடீரெனத் தண்டவாளம் ஒன்றில் பிணமாக மீட்கப்பட்டுள்ளான்.

இளவரசனின் இறப்பு தற்கொலை என்றே செய்தி பரப்பப்படுகிறது.

ஆயினும் அது கொலைதான் என்பதற்கு இளவரசன் தரப்பினர் முன் வைத்துள்ள ஆதாரங்கள் சில-

1. 2013 மார்ச் மாதம் 19ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையான திவ்யா நான் இளவரசனுடன் வாழ விரும்புகிறேன் என்று வாக்குமூலம் அளித்தார். இதனால் பா.ம.கவினர் கடுமையாக அதிர்ச்சியடைந்தனர். அந்தப் பெண்ணைத் தங்களது கட்டுக்குள் கொண்டுவர முயன்றனர்.

2. 2013 மார்ச் 27 அன்று நீதிமன்றத்தில் முன்னிலையான திவ்யா தமது முடிவில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார். இளவரசன் குடும்பத்தினர் தம்மை நன்றாகக் கவனிப்பதாகத் தெரிவித்தார்.

3. பிறகு இளவரசனுடன் சேர்ந்து வாழ்ந்துவந்தார். தனது அம்மாவைப் பார்க்கப்போன திவ்யா பா.ம.க.வினரால் கடத்தப்படுகிறார். ஒரு இரகசிய இடத்தில் வைத்து மிரட்டப்படுகிறார் அவர் தங்க வைக்கப்பட்ட இடம் தைலாபுரம் என்று பத்திரிகைகள் எழுதின.

4. பிறகு ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு வந்தபோது தான் தன் அம்மாவைக் கவனிக்க விரும்புவதாகவும் தெரிவித்து அவருடன் சென்றார்.

5. 2013 ஜூலை 1 திகதி அதே மனு விசாரணைக்கு வந்தபோது நீதியரசர்கள் தனியாக தமது அறையில் அவரை விசாரிக்க வேண்டும் என்று கூறினர். வன்னியர்களின் வழக்கறிஞர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தனர். தனியாக விசாரித்தால் அவர் சுதந்திரமாக உண்மையைக் கூறிவிடக் கூடும் என்று பயந்தனர். ஆனால், நீதிபதிகள் தமது அலுவலைக் காரணம் காட்டி மாலை 4 மணிக்குத் தமது அறையில் விசாரிப்பதாக உத்தரவிட்டனர்.

6. மாலை 4 மணிக்கு நீதியரசர்கள் விசாரித்தபோது தாம் இளவரசனுடன் வாழ விரும்புவதாகவும் ஆனால் தன் அம்மா அதை ஏற்கும் வரை அவருடன் இருக்க விரும்புகிறேன் என்றும் சொன்னார். அதை அறியாத பா.ம.க. வழக்கறிஞர்கள் இளவரசன் கட்டாயப்படுத்துகிறார், மிரட்டுகிறார் எனவே அந்தப் பெண்ணை அம்மாவுடன் அனுப்ப வேண்டும் என்று வாதிடுகின்றனர். அவர்களின் எண்ணத்தை அறிந்த நீதியரசர்கள் 3ஆம் தேதிக்கு வழக்கை ஒத்தி வைக்கின்றனர். அப்போது திவ்யா/ இளவரசன் ஆகிய இருவரும் நீதிமன்றத்திற்கு வரக்கூடாது என்று உத்தரவிடுகின்றனர். அப்போது மாலை 5 மணி.




7. திவ்யா நீதியரசர்களிடம் சொன்ன செய்தி பத்திரிகைகளில் வந்தது. அதைக்கண்ட பா.ம.கவினர் கடுமையாக அதிர்ச்சியடைந்தனர். தமது நெருக்கடிகளைத்தாண்டி திவ்யா உண்மையைக் கூறி விட்டதால் கடும் கோபம் அடைகின்றனர். இந்நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவின்படி இளவரசன் தருமபுரிக்குக் கிளம்பிப் போகிறார்.

(20 பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருளின் கதவுகளைத் திறந்தவன்

08 ● ஔண்யன்

அசாஞ்சே ஒருபுறம் ஹக்கிங் கச்சேரி நடத்திக் கொண்டிருந்தாலும், மறுபுறத்தில் சிறுவயதில் இழந்துவிட்ட குடும்பப் பாசத்துக்காகத் தொடர்ந்தும் ஏங்கிக் கொண்டேயிருந்தான். மெல்பேர்ண் பல்கலைக்கழகத்தில் கணினித் துறையில் பயின்று கொண்டிருந்தபோது, யூலியனின் காதல் ஓர்மோன்கள் துள்ளிக் குதித்து விளையாடின. விளைவு? காதலி ஒருவரின் அன்புக்கு அடிமையாக வேண்டிய நிலை யூலியனுக்கு வந்தது. ஒருபுறம் கணினி மூலமான சாமர்த்திய இணைய உள்நுழைவுகளை நிகழ்த்திக் கொண்டே காதல் உலகிலும் யூலியன் 17 வயது முதல் சஞ்சரிக்கத் தொடங்கினான்.

தன்னுடைய ஹக்கிங் நடவடிக்கைகளுக்கு வசதியாகவும், காதலியின் அன்பினில் முழுமையாக நனைவதற்காகவும் தனி வீட்டினில் யூலியன் வசிக்கத் தொடங்கினார். யூலியனுக்கும் அவரது காதலிக்கும் இடையிலான அன்பின் விளைவாக அவர்களுக்கு டானியல் என்ற ஆண்குழந்தையும் கிடைத்தது. ஆனாலும் விதி மீண்டும் யூலியனின் வாழ்வில் விளையாடியது. தன் காதலியையும், மகனையும் யூலியன் பிரியுமளவுக்கு குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றின. தமது குழந்தையின் நல்வாழ்வுக்காக விவாகரத்து வரை செல்லாமல் யூலியன் தம்பதிகள் மனமொத்துப் பிரிந்து செல்ல முடிவெடுத்தனர். விழிநீர் கசிந்தொழுக, தன் இணையையும், குழந்தையையும் யூலியன் பிரிந்து சென்றான். வேறு பெண்களோடும் யூலியனுக்குத் தொடர்புகள் இருந்தமையாலேயே அவர்களது குடும்பவாழ்வு விரிசலடைந்து, வெகு விரைவிலேயே பிரியவேண்டிய சூழல் உருவானதாக யூலியனது நண்பர்கள் கூறுகின்றனர். யூலியன் விட்ட இத்தவறுகள் இன்னமும் அவனைப் பின்தொடர்கின்றன. யாரலும் அசைக்க முடியாத யூலியனை இந்தப் பலவீனமே எதிரிகளின் வலைகளில் அவனை மாட்டியும் விடுகின்றது.

யூலியன் தன் வாழ்வில் வாங்கிய இந்த மரண அடியால் மிக அதிகமாகவே நிலைகுலைந்து போனான். எதிலும் பற்றில்லாதவன் போலநடந்து கொண்டான். இதனால் தன்னுடைய பாதுகாப்பு விடயத்திலும் அலட்சியமாகவே யூலியன் நடந்து கொண்டான். மதுபானசாலைகளிலேயே தன்னுடை முழுநேரத்தையும் செலவிட்டான். யூலியனைப் பார்க்க வேண்டுமானால் நகரில் உள்ள பிரபலமான மதுபானசாலைக்குப் போனாலே போதும் என்ற அளவுக்கு நிலைமை கட்டுமீறிப் போனது. இதைவிட்டால் யூலியனை வீழ்த்த வேறு சந்தர்ப்பம் கிடையாது என்பதை உணர்ந்து கொண்ட அவுஸ்திரேலியப் பொலிஸ் அசாஞ்சே மீது எதாவது பயங்கரமான வழக்கொன்றைத் தொடுப்பதற்கு ஆயத்தமானது. அதை விடவும் அவுஸ்திரேலியாவில் தம் இருப்புக்கு அசாஞ்சே ஆப்பு வைத்துவிட்ட ஆத்திரத்தில் நோர்டெல் நிறுவனமும் யூலியனைப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்தது. மூன்று தடைவைகள் யூலியனைக் கொல்வதற்கான முயற்சிகள் நடத்தப்பட்டன. இதற்கு அவுஸ்திரேலியப் பொலிஸாரின் மறைமுக ஆதரவும் இருந்தது. அத்துடன் கொலையாளிகளுக்கு ஆதரவாக யூலியனின் நடமாட்டத்தை வேவு பார்த்துச் சொல்லும் நடவடிக்கையையும் பொலிஸ் செய்து கொடுத்தது.


ஆனாலும் அதிர்ஷ்டவசமாக யூலியனுக்கு வைத்த குறியில் வேறு நபர்களே மாட்டிக் கொண்டனர். தன் மீதான கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் - அதற்கு சற்று முன்னர் தான் அவ்விடங்களில் இருந்து - யூலியன் வெளியேறியிருந்தான். அது தன் மீதான தாக்குதலை முன்கூட்டியே அறிந்ததால் அல்ல. மாறாக எல்லை மீறிய போதை காரணமாக அவ்விடங்களில் இருந்தவர்களால் அவன் அப்புறப்படுத்தப்பட்டிருந்தான். ஆயினும் மூன்றாவது முயற்சி யாக யூலியன் மீது செயற்கையான கார் விபத்து ஒன்று செட்டப் செய்யப்பட்ட போது, அதில் யூலியனின் நண்பன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்தான். இந்த மரணம் யூலியன் மீளவும் தன்னிலைக்குத் திரும்ப வழிவகுத்தது. தன்னால் பிறர் உயிரிழப்பதை யூலியன் விரும்பியதில்லை. அத்தோடு அதிகாரத்தின் மீதுள்ளவர்கள் மீது அவனது ஆத்திரம் திரும்பியது.

குடும்பம் என்ற உறவுநிலை கடைசி வரைக்கும் எட்டாக் கனியாக மாறிப்போனதாலும், அவுஸ்திரேலியப் பொலிஸாரின் தொடர்ச்சியான கண்காணிப்பாலும், தாக்குதல்களாலும் நாட்டைவிட்டு வெளியேறும் முடிவுக்கு யூலியன் வந்தான். அத்துடன் இதுவரையும் தான் விளையாட்டுத்தனமாகக் கையில் எடுத்திருந்த ஹக்கிங் நடவடிக்கைகளை உலக மக்களின் கண்களுக்குத் தெரியாமல் இருளில் நடந்து மறைந்த அக்கிரமங்களை வெளிப்படுத்தும் ஆயுதமாக மாற்றவும் யூலியன் முடிவெடுத்திருந்தான்.

ஹக்கிங் செய்கின்ற போது இணையங்களில் மறைந்து கிடந்த பயங்கரங்களும் நண்பனின் மறைவுமே யூலியனை இவ்வாறு மாற்றியிருந்தன. எனவே தன் எண்ண அலைகளை ஒத்த நபர்களைக் கண்டறியவும், பாது காப்பை உறுதி செய்யவும் யூலியன் அவுஸ்திரேலி யாவை விட்டுப்பிரிந்து செல்ல ஏற்பாடானது. ஆனாலும் எந்த நாட்டுக்குச் செல்வதென யூலியனால் தீர்மானிக்க முடியவில்லை. இதனால் முதலில் ஒரு நாடோடி போன்று தன்னைப் போல இணையங்களின் இருள் கதவைத் திறக்க முனையும் எண்ணம் கொண்டவர்களைக் கண்டறிய எல்லா நாடுகளுக்கும் சுற்றுலாப் பயணியாக யூலியன் புறப்பட்டான்.

அந்தப்பயணமே உலகில் பல நாடுகள் புரிந்த அக்கிரமங்களை துகிலுரிக்க முதற் படியாக அமையப்போகின்றது என்பதை யூலியன்கூட அப்போதைக்கு அறிந்திருக்கவில்லை.

(திரைகள் இன்னும் திறக்கும்)




மனோஜ் நைட் சியாமளனின், இந்திய தாக்கம் குறையாத, ஹொலிவுட் படம். இரண்டே நடிகர்கள். சுவாரஸ்யம் ததும்பி வழியும் விஞ்ஞான புனைவு கதை.

# ஆப்டர் ஏர்த்

பூமி, வாழத் தகுதியற்றதாக மாறியபிறகு, மனித இனம் குடியேறும் வேறொரு கிரகத்தில் வசிக்கிறார்கள் சைபர் ரெய்கும் (வில் ஸ்மித்), அவரது மகன் கிடாய் ரெய்கும் (ஜேடன் ஸ்மித்). தந்தை ஒரு விண்வெளி காவல் அதிகாரி. வேலை நிமித்தமாக அவர் அடிக்கடி வெளியில் இருப்பதும், மகன் தந்தைக்காக ஏங்கு வதும் ஆரம்பம். மூன்று நாட்கள் பூமியை கண்காணிக்கவும், மனிதர்களை அழிக்கும் ஒரு கொடூர மிருகத்தை, மீண்டும் பூமியிலேயே விடுவதற்கும், சைபர் கிளம்புகிறார். மகனின் ஏக்கத்தைப் போக்க, அவனையும் தன்னுடனே அழைத்துப் போகிறார். வழியில் விண்கற்கள் தாக்கி, விண்கலத்தின் வால் பகுதி துண்டாகி பறந்துபோகிறது. கலத்தில் உள்ள அனைவரும் இறக்க, சாகும் தருவாயில் சைபர்! உதவிக்கு அழைக்கப் பயன்படும் பீக்கன் என்னும் சிக்னல் கருவி, துண்டான வால் பகுதியில்! மகன் கிடாய், பூமியில் இறங்கி, மிருகங்களுடன் போராடி, பீக்கனை கண்டெடுத்து, சிக்னல் அனுப்பி, தந்தையை காப்பாற்றுவது க்ளை மாக்ஸ்.

ஒரு சிறுவனையும், அடிபட்ட தந்தையையும் வைத்துக்கொண்டு, அற்புதமாக கதை சொல்லியிருக்கிறார் இயக்குநர். புதிய கிரகத்தில்... கட்டிடங்கள் எல்லாம் முக்கோண வடிவத்தில் வானுயர இருப்பதும், இராட்சத மீன்களாக விண்கலங்கள் பறப்பதும், கண்கள் விரிய வைக்கும் காட்சிகள். பீட்டர் சுசிட்ஸ் கீயின் ஒளிப்பதிவு, அழகை சேதாரமில்லாமல் அள்ளி வந்திருக்கிறது. ஜேம்ஸ் நியூட்டன் ஹேவர்ட், இசையால் நம் இதயங்களை தடதடக்க வைக்கிறார். பருவ மாற்றத்திற் கேற்ப நிறம் மாறும் உடைகள், இரு பக்கமும் கூர் கத்திகள் நீளும் வெள்ளித் தடி, மணிக்கட்டிலேயே படம் தெரியும் விஞ்ஞானம் என, அதிகம் உழைத்திருக் கிறார்கள் படக்குழுவினர். சிறுவன் ஜேடன் ஸ்மித் பட்டையை கிளப்பியிருக்கிறான். புதிய ஆபத்துகளைக் கண்டு பயந்து நடுங்குவதும், தந்தையின் வார்த்தைகளால் வீரம் கொள்வதுமான அட்டகாச நடிப்பு! விருதுகள் நிச்சயம், வாழ்த்துக்கள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உலகம்



**இலக்கம் 01இல் இருந்து 15 வரையிலான இலக்கங்களைத் தொடர்பு படுத்தி உருவத்தைக் கண்டு பிடியுங்கள்.**




## 24 கும்பகர்ணன்






## சிறுவர் மர்மத் தொடர் 09

– அம்புலி

நந்திவர்மனை அடர்கானகத்துக்குள் தன்னுடைய, மாயாஜால விளையாட்டைப் பயன்படுத்தி வரவழைத்ததன் காரணத்தை மாயக் கிழவி விபரிக்கத் தொடங்கினாள். "நந்திவர்மா! நான் என்ன தான் மந்திர தந்திரங்களில் தேர்ந்தவளாக இருந்தாலும் என்னால் வெல்ல முடியாத ஒரு விடயமும் உள்ளது" என்று கொஞ்சம் சோகம் இளையோடும் குரலில் கிழவி கூறினாள். "பஞ்சமா பாதகங்களையும் ஈவிரக்கமின்றி மந்திர சக்தியால் நிறைவேற்றிக் கொள்ளும் உன்னாலும் வெல்லப்பட முடியாத விடயம் ஒன்று உள்ளதா? ஆச்சரியமாக இருக்கின்றதே!" என்று ஓரளவு துணிச்சலை வரவழைத்துக் கொண்டு நந்திவர்மன் கேட்டான்.

"ஆமாம் நந்திவர்மா! இதுவரையும் என்னால் மரணத்தை வெல்லும் சக்தியை அடைய முடியவில்லை. அதை அடைவதற்காகவே உன்னை வரவழைத்தேன்" என மந்திரக் கிழவி சொன்னதும் நந்திவர்மன் வியப்படைந்தான்.

"நீ மரணத்தை வெல்வதற்கு நான் என்ன செய்ய முடியும்?" என அவன் வினவினான்.

"முடியும் மன்னா! உனக்கு இன்னும் இரண்டு மாதத்தில் இரட்டைப் புதல்வர்கள் பிறப்பார்கள். அவர்களுக்குப் பதினைந்து வயது நிரம்பியதும், காளி தேவிக்குப் பலி கொடுத்தால், நான் மரணத்தை வென்று, பதினாறு வயது மங்கையைப் போல இளமையும் பெற்று விடுவேன். மன்னா! இப்போது சொல்! எனக்காக உன் மகன்களைத் தருகிறாயா?" கெஞ்சும் குரலில் கிழவி கேட்டாள்.

"முடியாது! சாக வேண்டிய நீ வாழ்வதற்காக என் புதல்வர்களைப் பலிக்கடாவாக்க முடியாது!" எனச் சீறும் குரலில் மன்னன் கூறினான். அதற்குக் கிழவி சொன்ன பதில் நந்திவர்மனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

[மந்திரக் கிழவி வருவாள்...]

## பொன்மொழிகள்

* ஒருவனுக்கு நீ செய்த உதவிகளை அவனிடம் அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருப்பது அவனைப் பழிவாங்குவது போலாகும்.

– தேமேச்தனுஸ்

* எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ, அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது.

– ஜேம்ஸ் ஆலன்.

* உனக்கு மிக நன்றாக தெரிந்த விஷயத்தை, அதுபற்றி கொஞ்சமும் தெரியாத ஒருவன் சொல்லிக் கொடுப்பதை கேட்க நீ தயாராக இருந்தால் நீ வாழ்வில் வெற்றி பெறுவாய்.

– நிகாலஸ் செம்ஸ்ஃபோர்ட்

## கல்வி



எல்லா இடத்திலும்
ஏற்றம் அளிப்பது!
பொல்லா மடமையைப்
பூண்டோ டொழிப்பது!

கல்வி என்பது
கண்களைத் திறப்பது!
கல்லாதிருப்பது
கண்களைத் துறப்பது!

அல்லும் பகலும்
அணையா விளக்கது!
கல்லில் பதியும்
கலையா எழுத்தது!

செல்வம் அனைத்திலும்
சிறப்பிடம் வகிப்பது!
இல்லார்க் கெடுத்ததை
இறைப்பினும் மிகுப்பது!

சொல்லில் கனிவு
சுவையைக் குழைப்பது!
வெல்லும் துணிவு
விவேகம் விளைப்பது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அம்பலமான அமெரிக்க ஒற்றாடல்

**— அகேனன்**

அமெரிக்கஉளவுத் துறை சில நாட்களிலேயே எட்வர்ட் ஸ்நோவ்டென் இருக்கும் ஹொங் கொங்கின் விடுதியை சுற்றி வளைத்து விட்டார்கள். ஆனாலும் இவரை நெருங்க சி.ஐ.ஏ ஆல் முடியவில்லை. இதற்கு காரணம் சீனா மற்றும் ரஷ்யாவின் பாதுகாப்பு வளையத்தில் இருப்பதால் ஆகும்.

அமெரிக்க உளவுத் துறையின் இரகசியங்களை ஹொங்கொங்கில் வைத்து எட்வர்ட் ஸ்நோவ்டென் வெளியிட்ட விவகாரத்தில் கருத்துத் தெரிவித்துள்ள சீனா, அமெரிக்கா உலகத்துக்கே வில்லன் என்று கடுமையாக சாடியுள்ளது. சீன அரசுக்கு சொந்தமான ஸின்ஹவா செய்தி முகவர் ஸ்தாபனம் அமெரிக்கா பற்றிய இந்த கடுமையான வார்த்தைகளை வீசியுள்ளது.

" ஸ்நோடென்னை கைது செய்து தம் மிடம் ஒப்படைக்கும் படி அமெரிக்க அரசு கூறுகிறது. மற்றைய நாடு ஒன்றுக்கு இப்படி கூறுவதற்கு முன், அமெரிக்கா தமது தவறுகளை உணர வேண்டும். அவற்றை திருத்திக் கொள்ள முன் வர வேண்டும்" என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்நோடென் அரசியல்தஞ்சம்கோரி ஹொங்கொங்கை விட்டுத் தப்பிச் செல்லலாம் என்பதால் இவ ரை ஹொங்கொங்குள்ளேயே முடக்க அமெரிக்க திட்டம் தீட்டியது. இதனால் அவரதுகடவுச் சீட்டையும் அமெரிக்கா முடக்கி வைத்திருந்தது. அதையும் மீறி கடந்த 24 ஆம் திகதி ஸ்நோடென் விமானம் மூலம் ரஷ்யா சென்றடைந்தார். ஸ்நோ டென் பயணித்த விமானம் ரஷ்ய எல்லைப் பரப்பினுள் பிரவேசித்த பிறகே தகவல் கசிய விடப்பட்டது. அதுவரை தகவல் இரகசியமாகப் பேணப்பட்டிருக்கிறது. ரஷ்யாவில் இவரின் வரவை எதிர் பார்த்து ஊடகவியலாளர்கள் கால் கடுக்கக் காத்திருந்தார்கள். ஆனாலும் ஸ்நோடென் யார் கண்ணிற்கும் படவில்லை. விமானத்தில் வந்த ஸ்நோடென் எங்கே மாயமானார் என்பது எவருக்குமே தெரியவில்லை. விமான நிலையத்திற்கு வெளியே ஸ்நோடென் மீது தாக்குதல் நடத் துவதற்கு அமெரிக்க சி.ஐ.ஏ நிறுவனமும் தயாராகவே இருந்திருக்கிறது. எல்லோருக்கும் கடைசியில் மிஞ்சியது ஏமாற்றம் தான். அப்படியானால் ஸ்நோடென் எங்கே?

உண்மையில் ஹொங்கொங்கில் தங்கியிருந்த ஸ்நோடென் விமானம் மூலம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு மொஸ்கோ சென்றார். அங்கிருந்து தனக்கு அடைக்கலம் கொடுக்கும் ஈகுவேடார் நாட்டுக்கு செல்ல அவர் திட்டமிட்டார். இதற்காக அவர் கியூபா செல்ல விமான ரிக்கெட் எடுத்தார். அவர் செல்ல வேண்டிய விமானம் புறப்படும் வரையில் ஸ்நோடென் அந்த விமானத்தில் ஏறவில்லை. அவருக்கு ஒதுக்கிய 17-ஏ இருக்கை காலியாக இருந்தபடியே விமானம் புறப்பட்டு சென்றது.

இந்த 3 நாள் மர்மத்துக்கு விடை கிடைத்தது. மர்ம முடிச்சை அவிழ்த்தவர் ரஷிய அதிபர் புடின். பின்லாந்து நாட்டு சுற்றுப்பயணத்துக்காக விமான நிலையம் வந்த அவர் இது குறித்து நிருபர்களிடம்

"ஸ்நோடென் எங்கும் செல்லவில்லை. அவர் பத்திரமாக ரஷ்யாவில் தான் உள்ளார். பாதுகாப்புக் காரணங்களுக்காக மொஸ்கோ விமான நிலையத்தில், வெளிநாடு செல்லும் பயணிகள் தங்கும் இடத்தில் தான் ஸ்நோடென் இருக்கிறார். அவர் சுதந்திரமான, தனி நபர். அவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்க மாட்டோம். இது தொடர்பாக எங்களுக்கும், அமெரிக்காவுக்கும் எந்த ஒப்பந்தமும் இல்லை." இவ்வாறு புடின் தெரிவித்தார். அதன் பின்னரே ரஷ்ய விமானத்தில் இருந்து ஸ்நோடென் எப்படித் தப்பினார் என்ற மர்மம் அமெரிக்காவுக்குத் துலங்கியது. பாம்பின் காலை பாம்பறியும். அமெரிக்கா எந்தெந்த வழிகளில் எல்லாம் தன் மீது தாக்குதல் தொடுக்கும் என்பது ஸ்நோடென்னுக்கு அத்துப்படி. எனவே அவற்றுக்கு எதிரான காய்நகர்த்தல்கள் மூலமே இதுநாள்வரை அவர் தன்னுடைய இருப்பை தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்.

தனக்கு அரசியல் அடைக்கலம் வழங்குமாறு ஸ்நோடென் பல்வேறு நாடுகளிடமும் கோரிக்கை விடுத்திருந்தார். ஆயினும் அமெரிக்காவின் சண்டித்தனத்திற்குப் பயந்த பல நாடுகள் முதலில் அவருக்கு அடைக்கலம் கொடுக்க மறுத்தன இன்னும் சில நாடுகள் பகிரங்கமாகவே அமெரிக்க வல்லாதிக்கத்தோடு கைகோர்த்துக் கொண்டு ஸ்நோடென்னை வேட்டையாடக் கிளம்பின. என்றாலும் ஈக்குவடோர், பொலிவியா உள்ளிட்ட பதினைந்துக் கும் மேற்பட்ட நாடுகள் அமெரிக்காவின் அச்சுறுத்தலையும் அலட்சியப்படுத்தி விட்டு ஸ்நோடென்னுக்கு அடைக்கலம் கொடுக்கத் தயார் என்று அறிவித்தன. இந்த அறிவிப்பு ஏற்கனவே ஸ்நோடென் கொடுத்த அடியால் கலங்கிப் போயிருந்த அமெரிக்காவுக்கு கடுப்பேற்றி விட்டது.

"ஸ்நோடென் அமெரிக்க பிரஜை . அவர் தன்னுடைய நாட்டின் இரகசியங்களை வெளியிட்டமை தேசத்துரோகம். இவ்வாறு அமெரிக்காவுக்கு துரோகம் செய்து விட்டு தப்பித்தோடும் அந்தக் குற்றவாளிக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகள் அமெரிக்கா மீது போர் பிரகடனம் செய்வதாகவே கருதவேண்டியுள்ளது. எனவே அவரை காக்க நினைக்கும் நாடுகள் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும்'' என்று முழங்கிய அமெரிக்கா அத்தோடு நின்று விடாமல் ரஷ்யாவின் எல்லா விமான நிலையங்கள் மீதும் தனது கண்காணிப்பை அதிகப்படுத்தியது. இந்த நிலையில் மீண்டும் ஒருமுறை தன் முகத்தில் தானே அது கரி யைப்பூசிக் கொள்ளவும் தவறவில்லை.

பொலிவியா நாட்டின் அதிபர் ஈவோ மாரல்ஸ் அண்மையில் ரஷ்யாவில் நடந்த மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு, நாடு திரும்ப விமானத்தில் புறப்பட்டார். அவரது விமானத்தில் ஸ்நோடென் ஏறி அமர்ந்திருப்பதாக தகவல் வெளியானது. ஏற்கனவே ஸ்நோடென் தஞ்சம் கேட்டு வேண்டுகோள் விடுத்தால் அது பற்றிப் பரிசீலிக் கப்படும் என அதிபர் ஈவோ மாரல்ஸ் கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், ஈவோ மாரல்ஸ் பயணம் செய்த விமானத்தில்ஸ் நோடென் பயணம் செய்வதாக தகவல் பரவியதால், அவரது விமானம் பிரான்ஸ், போர்த்துக்கல் நாடுகளின் வழியே பறக்க குறித்த நாடுகளால் அனுமதி மறுக்கப்பட்டது. இதன் காரணமாக அவரது விமானம் அவசர அவசரமாக ஒஸ்திரியா நாட்டின் தலைநகர் வியன்னாவில் வலுக்கட்டாயமாக தரை இறங்க நேரிட்டது. ஆனால் நீண்ட நேரம் அந்த விமானத்தை சல்லடையாக சோதனை இட்டபோதும் அதற்குள் ஸ்நோடென் இருக்கவில்லை. தேடுதல் நடத்தியவர்கள் அணில் ஏறவிட்ட நாய்கள் போல தலையை தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பினர். விமானத்தின் ஸ்நோடென் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் பிரான்ஸ், போர்த்துக்கல் நாடுகள், அதிபர் ஈவோ மாரல்ஸ் பயணித்த விமா னம் தங்கள் நாட்டின் மேலே பறந்து செல்ல அனுமதி அளித்தன. என்றாலும் இந்தச் சோதனை தன்னையும் தன் நாட்டையும் அவ மானப் படுத்துவதாக அமைந்து விட்டது என்று பொலிவியா அதிபர் பொரிந்து தள்ளியுள்ளார்.

தனது வெளியேறுகை பற்றி அமெரிக்கா என்னவிதமான எதிர்விளைவுகள காட்டுகிறது என்பதை அறிவதற்கே பொலிவிய விமானத்தில்தான் பயணிப்பதாக ஸ்நோடென் திட்டமிட்டு ஒரு வதந்தியைப் பரப் பியிருக்கிறார். அதை அறிந்து கொள்ளாத அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் ஸ்நோடென்னின் வலையில் வீழ்ந்து தேவையில்லாமல் பொலிவியாவின் பகையை சம்பா தித்துக் கொண்டுள்ளன. இப்போதும் ஸ்நோடென் மொஸ்கோவில் தான் பதுங்கிருக்கிறார்; தக்கதருணம்வரும் போது பாய்வதற்காக.

## சாதி அரசியல்

(5 ஆம் பக்க தொடர்ச்சி)

8. 3ஆம் திகதி நீதிமன்றத்தைத் திசைதிருப்புவதற்காகவும், திவ்யாவின் வாக்குமூலம் பத்திரிகையில் வெளியானதை மறுக்கவும் அவர் கடுமையாக மிரட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படுகிறார். அன்றைக்கு அவர் ஆஜராகத் தேவையில்லை என்று நீதிமன்றம் கூறிய பிறகும் கூட நீதிமன்றத்திற்கு வந்த திவ்யா தான் இளவரசனுடன் வாழ விரும்பவில்லை என்று பத்திரிகையாளர்களிடம் தழுதழுத்த குரலில் கூறிவிட்டுச் செல்கிறார். சிறிது நேரத்தில் மயக்கம்போட்டு விழுகிறார்.

9. தருமபுரிக்கு அழைத்துச் செல்லப்பட்ட திவ்யா அவ்வை நகர் என்ற இடத்தில் உள்ள தமது பெரியம்மா வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக இளவரசன் ஊரில் செய்தி பரவுகிறது. இதைக் கேள்விப்பட்ட இளவரசன் திவ்யாவை சந்திக்கப் போகிறார். அங்கே படுகொலை செய்யப்படுகிறார். இளவரசன் கொலை செய்யப்பட்டுக் கிடந்த இடத்துக்கு அருகில்தான் அவ்வை நகர் இருக்கிறது.

10. இளவரசனைக் கொலை செய்ய இரும்பு உருட்டை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கொலை செய்தவர்களின் கையுறையும், இரும்புத் தடியும் அருகில் கிடந்திருக்கிறது. ஆனால், அவை பின்னர் மாயமாகியிருந்தன.

11. ரயிலில் அடிபட்டு இறந்திருக்கலாம் என்ற சந்தேகம், அல்லது அவன் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்ற அறிவிப்பு அத்தனையும் பொய். ஏனெனில் அவன் கொலையுண்ட நேரம் 2.15 என்று தெரியவந்துள்ளது. அவன் இறந்த நேரத்தில் எந்த ரயிலும் அந்தப் பக்கம் போகவில்லை என்று ரயில்வே அட்டவணையில் தெரியவந்துள்ளது.

12. ரயிலில் விழுந்திருந்தால் அவன் தலையில் ஒருபக்கம் மட்டும் சிதறியிருக்காது. தலை வேகமாக ஓடும் ரயிலில் மோதியிருந்தால் முழுவதும் சிதறியிருக்கும். அடித்த வேகத்தில் கற்களின் மீது விழாமல் உடல் நீண்டதூரம் தூக்கி வீசப்பட்டிருக்கும்.

13. அப்படி தூக்கி வீசப்படும் போது உடலில் கடுமையான சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டிருக்கும். போட்டிருந்த உடை கிழிந்து சின்னாபின்னமாகியிருக்கும்.

14, இரத்தம் உறைத்து கருத்துப்போவதற்கான கால அவகாசம் அங்கு இல்லை, காய்ந்த இரத்தமே அங்கு இருந்தாக தெரியவந்துள்ளது..

15. ரயில் ஓடும்போது உருவாகும் புழுதி அவன் மீது இல்லை.

16. இளவரசன் இறந்த செய்தி கிடைத்த உடனே அனைத்து ஊடகங்களும் அவன் தற்கொலை செய்து கொண்டான் என்று 3 மணிக்கே அறிவித்தன. காவல் துறையும் உறுதி செய்கிறது. முக்கால் மணி நேரத்திற்குள் தமது கண்டுபிடிப்பை உறுதி செய்த அதிசயம் இளவரசன் கொலையில் தான் நடந்துள்ளது.

இளவரன் - திவ்யா காதலுக்கு அவனின் மரணத்தின் மூலம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாக சாதிவெறியர்கள் கொக்கரிக்கக் கூடும். ஆனால், உலகில் "காதல் என்றும் அழிவதில்லை" இன்னும் ஆயிரம் இளவரசன்களை எதிர்கொள்ளச் சாதிவெறியர்கள் இப்போதே தயராக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பித்தன் பதில்கள்

# உறஞ்சுறவை கட்டுவினமே...?

**செ. சாம்பவி, அளவெட்டி.**

**கே :** மாலை நேரங்களில் பெண்களை வேண்டுமென்றே இடிப்பதற்கு ஒரு கூட்டம் பஸ்ஸில் வேலைமினக்கெட்டு ஏறி வருகிறதே. அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் பித்தூ? (நீங்களும் அப்படிப்பட்ட ஆள் என்று தான் கேள்விப்பட்டேன்)


**ப :** இப்ப முந்தின மாதிரி பெடியளுக்கு வேலை வெட்டி இல்லை. அதால மிஞ்சிக் கிடக்கிற நேரத்தை எப்பிடி சிலவழிக்கலாம் எண்டு யோசிச்சுத்தான் இப்பிடி பொம்பிளைப் பிள்ளையளை உரஞ்சுறதுக் கெண்டு ஒரு குறூப் அலையுது. அதுவும் நீங்கள் சொன்ன மாதிரிப் பின்னேரங்களில உவையின்ர அட்டகாசம் தாங்க முடியாது. பொம் பிளையளும் உந்தக் கூத்தை வெக்கத்தில வெளியில சொல்லுறது குறைவு. அது உப்பிடியான ஆக்களுக்கு இன்னும் வாசியாப் போட்டுது. பஸ்ஸில இதைமாதிரி உரஞ்ச வாற வங்களால எரிச்சலடஞ்ச ஒரு இந்தியப் பிள்ளை சொல்ற மாதிரி கவிதை யொண்டும் ஆரோ எழுதினவை.

நாங்களும் பாபர் மசூதிகள்தான்
இடிப்பதற்கு ஆயிரம் பேர்
கட்டத்தான் யாருமில்லை

(மற்றது நீங்க கேள்விப்பட்ட விசயத்தை மிஸிஸ் பித்தர் கேட்டிருந்தா எக்கணம் அவா உதையுற உதையில பாபர் மசூதி இருந்த இடத்தில போய் நான் விழுந் திருப்பன்)

**அ. தவசீலன், இணுவில்.**

**கே :** இந்தியாவில் உத்தர கண்ட மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ள அழிவுகள் நெஞ்சை உருக்குகின்றனவே. இவ்வாறான இயற்கை அழிவுகளை மனிதனால் தடுக்க முடியாதா பித்தா?




**ப :** இயற்கையை நீ அழிச்சால் இயற்கையால் நீ அழிவாய் எண்டு எங்கேயோ படிச்ச நினைவு (பித்தர் படிச்ச ஆளோ எண்டு மனசுக்க நீங்கள் புறுபுறுக்கிறதும் கேக்குது) என்னதான் இயற்கையை வெண்டுட்டதாக மனிதன் கொக்கரிச்சாலும் வேறயொரு பக்கத்தால இயற்கை தன்ர விளையாட்டைக் காட்டத்தான் செய்யுது. ஆனானப்பட்ட அமெரிக்காவே போனவருசம் வெள்ளத்தால ஆடிப்போகேக்க இந்தியா, இலங்கை மாதிரி நாடுகளெல்லாம் எப்படி இயற்கையை வெல்ல முடியும். இப்பிடி ஆயிரத்தெட்டுத்தரம் அழிவு வந்தாலும் லட்சக்கணக்கில ஆக்கள் செத்தாலும் மனிதனுக்கு இயற்கையைக் காக்க வேணுமெண்ட புத்தி கடைசி வரைக்கும் வரப்போறேலை. அதால இயற்கையும் தன்ர கோபத்தைக் கை விடப்போறேலை. ஏதோ இங்க அப்பிடி வெள்ளம் வரேலை எண்டு சந்தோசப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்

**க. காந்தன், வவுனியா.**

**கே :** நடிகர் தனுஷ் ஹிந்தியில் நடித்த முதல் படமான ராஞ்சனா மாபெரும் வெற்றியாமே. பித்தரே நீங்கள் அந்தப்படத்தின் தமிழ்ப் பதிப்பான அம்பிகாபதி பார்த்துவிட்டீர்களா?

**ப :** இன்னும் அந்தப்படம் பாக்கேலை. ஆனா ரீவியில படம் பற்றி சின்னக் கட்டங்கள் போட்டுக் காட்டுறவங்கள். நல்லபடம் போலதான் கிடக்கு, இப்ப அதை விடப் புதினம் என்னெண்டா ஒரு தமிழ் நடிகர் அதுவும் 'மொழமொழ கொழுகொழு' எண்டிருக்கிற ஹிந்தி நடிகர்களுக்கு இருக்கிற லட்சணங்கள் எதுவுமேயில்லாத ஒரு ஒல்லி நடிகர் தங்கட மொழிப் படத்தில நடிச்சு வெண்டது கன ஹிந்தி நடிகர்மாருக்கு பிடிக் கேலையாம். அவை தங்களுக்கு தெரிஞ்ச பேப்பர்காரரிட்ட சொல்லி தனுசைப்பற்றிக் கண்டபடி நக்கலடிக்கச் சொல்லுகினமாம். ஆனா அதொண்டும் சரி வரேலை. இப்ப லக்ஸ் சோப் விளம்பரத்துக்கு தனுசையும், ராஞ்சனா படத்தில அவரோட துணிஞ்சு நடிச்ச சோனம் கபூரும் ஒப்பந்தமா யிருக்கினம். இது ஹிந்தி நடிகர்மாருக்கு இன்னும் வயிறெரியப் பண்ணியிருக்காம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 577



### மேலிருந்து கீழ்

1. துயரம்
2. பாதை
3. நாடாளுமன்றத் தலைவர்
4. செடி, கொடி முதலியன மழையின்மையால் அல்லது அதிக வெப்பத்தால் காய்தல்.
6. அந்தணன்
8. புகையிலையால் தயாரிக்கப்பட்ட ஒரு பொருள்
9. பழநியில் குடியிருக்கும் கடவுள்
10. வியாபாரம்
11. பிச்சைக்காரன்
12. மண்டையோடு
16. தோழன்
17. நதி

### இடமிருந்து வலம்

1. குண்டு துளைக்காத வாகனம்
5. வணக்கம்
7. இனிய ஓசை
8. மூட்டை
9. முயற்சி செய்
10. (கண்ணீர்) சிந்த
11. குடிக்க
12. எண்ணு
13. ஒரு விளையாட்டு
14. பகுதி
15. தேனீக்கள் மூலம் பெறப்படுவது
16. சிறுநீர்
18. அகதிகள் தற்காலிகமாகத் தங்க வைக்கப்படும் இடம்
19. ஓர் உரிச்சொல்

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

## சொற்சிலம்பம் போட்டி இல. 577

சொற்சிலம்பம் 577 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சொற்சிலம்பம் போட்டி இல. 575 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. தகுதி, 2. விருட்சம், 3. சாசுவதம், 4. கணை, 6. பம்பரம், 8. குவி, 9. மிளகு, 11. சவுக்கு, 12. பாதிப்பு, 13. சாறு, 14. நாறு, 15. கல், 17. பிரி

**இடமிருந்து வலம்**

1. தவிடு, 3. சாதகம், 5. குரு, 6. பசு, 7. திட்டம் வகு, 10. பதவி, 11. சம்சாரம், 12. பாகு, 13. சாதி, 15. கறுப்பி, 17. குமுறுதல், 18. புரி

## போட்டி இல. 574 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | பிரகாசியம்மாள், "ராணி மஹால்" திகனை.இராஜவலை.கண்டி. |
| 2ஆம் பரிசு | ஞா. துரை, இல. 85/4, கார்மல் றோட், குருநகர், யாழ்ப்பாணம். |
| 3ஆம் பரிசு | எஸ். மோகனதாசன், சஞ்ஜீவன் ரயர் வேகஸ், திருமுறிகண்டி. |

## பாராட்டுப் பெறுவோர்

(1) திஸ்ஸ டினோஷன்,
கானடி வீதி,
களுதாவளை-01, களுவாஞ்சிகுடி.

(2) சி. எழில்வேள்,
அரசினர் வைத்தியசாலை,
முழங்காவில்.

(3) வி. வி. திருச்செல்வம்,
இந்திய உயர்ஸ்தானிகராலயம்
இல. 36-38, காலி வீதி,
கொழும்பு-03.

(4) பொ. பாலசுப்பிரமணியம்,
பிரதான வீதி,
தம்பிலுவில்-01.

(5) வ. இந்துமதி,
டச்சு வீதி, சித்தன்கேணி.

(6) செ. தர்மினி,
வல்லை வீதி, அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(7) சி. உதயகுமார்,
கைதடி மேற்கு, கைதடி.

(8) தவளாம்பிகை நாகேந்திரன்,
இல. 11-3/1, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

(9) வே. இராசநாயகம்,
சோறன்பற்று, பளை.

(10) சி. இராசரத்தினம்,
இல. 527, செல்வநாயகபுரம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பது வருடங்களில் முதன்முறை...



விளையாட்டு வீரர்களுக்கு உடல் உபாதைகள் ஒன்றும் புதிதல்ல. ஆனால், கடந்த 9 வருடங்களாக எந்தவொரு உபாதைகளுக்குள்ளும் சிக்கி ஒரு முழுமையான தொடர் ஒன்றிலிருந்து வெளியேறும் நிலைமை இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திரசிங் தோனிக்கு ஏற்பட்டதில்லை. முதல் தடவையாக அந்த நிலைமை கரீபியனில் முத்தரப்பு தொடரில் விளையாடிவரும் தோனிக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், இந்திய அணி மோதிவரும் முத்தரப்பு ஒருநாள் தொடர் மேற்கிந்திய தீவுகளில் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரின் இரண்டாவது போட்டியில் தோனி விளையாடிக் கொண்டிருக்கும் போது அவரது தொடைப்பகுதியில் உபாதை ஏற்பட்டதால் தொடர் முழுவதிலுமிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலை உண்டாயிற்று. தோனி இந்திய அணிக்காக விளையாடி வரும் கடந்த ஒன்பது வருடங்களில் தானாக எடுத்துக் கொண்ட ஒரு சில ஓய்வுகளைத் தவிர உபாதை காரணமாக வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கவில்லை.

அதிகளவான கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிவரும் அணியாக இந்திய அணி திகழ்கின்றது. சர்வதேச ஒருநாள், டெஸ்ட் மற்றும் டுவென்டி 20 தொடர்களுடன், ஐ.பி.எல். மற்றும் சம்பியன்ஸ் லீக் போட்டிகளிலும் இந்திய அணி பங்கேற்கின்றது. இவை அனைத்திலும் டோனி பங்குபற்றுகின்றார் என்பதே முக்கியமானது. எந்தவித ஓய்வுகளையும் எடுத்துக்கொள்ளாது தொடர்ச்சியாக போட்டிகளில் விளையாடிவரும் டோனிக்கு இதுவரை காலமும் உபாதை பெரியளவில் வந்ததில்லை என்பது மிகப்பெரிய விடயமே!

இன்றும் துடிப்புடன் போட்டிகளில் களமிறங்கும் டோனி, கடந்த யூன் 7ஆம் திகதி தனது 32ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார். வயது ஏற ஏற உபாதைகளும் பற்றிக் கொள்ளும். எனவே திட்டமிட்ட ஓய்வுகள் டோனிக்கு அவசியம். இது அவரது உடல்நிலையை எதிர்காலத்தில் நல்லபடியாக வைத்துக் கொள்ளவும் உதவும்.

டோனியின் ஓய்வைத் தொடர்ந்து முத்தரப்பு தொடரின் ஏனைய போட்டிகளுக்கு இந்திய அணியைத் தலைமை தாங்கும் வாய்ப்பு இளம் வீரர் விராட் ஹோக்லிக்கு கிடைத்திருக்கின்றது. இதேவேளை, எதிர்வரும் யூலை 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சிம்பாவேக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் டோனி பங்கேற்பது சந்தேகமாக உள்ளது. டோனியின் இடத்தை நிரப்புவதற்காக ஐ.பி.எல். போட்டிகளில் சிறப்பாக விளையாடிவரும் அம்பாதி ராயுடு இந்திய அணிக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்.

கடந்த 2004ஆம் ஆண்டு இந்திய ஒருநாள் அணிக்குள்ளும், 2005ஆம் ஆண்டு டெஸ்ட் அணிக்குள்ளும் பிரவேசித்த டோனி குறுகிய காலத்தில் இந்திய அணியின் தலைமைத்துவ பதவியையும் ஏற்றார். அனுபவம் இல்லாத இளம் வீரர்களை உள்ளடக்கிய இந்திய அணியைக் கொண்டு கடந்த 2007ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற உலகக் கிண்ண டுவென்டி 20 தொடரை டோனி வெற்றி கொண்டது முதல் இந்திய அணியின் வெற்றிப் பயணம் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மேலோங்கி இன்று முதலிடத்தில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சறுக்கும் பிரபலங்கள்!

தற்போது லண்டனில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் விம்பிள்டன் கிண்ண டென்னிஸ் சுற்றுத் தொடரில் பல அதிர்ச்சிகரமான முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. பல இளைய அனுபவமற்ற வீரர்கள் அசத்த பல சிரேஷ்ட அனுபவ வீரர்கள் தோல்வியைத் தழுவியிருக்கின்றார்கள். கிண்ணம் வெல்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட தரவரிசையில் முன்னணியில் உள்ள வீரர்கள் தங்களைவிட பின்னிலையில் உள்ள வீரர்களிடம் தோல்வியடைந்து வெளியேறியமை தான் பரிதாபம்.

நட்சத்திர வீரரான ரபெல் நடால் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். முதல் சுற்றுப் போட்டியில் உலகின் 5ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் நடால், தரவரிசையில் 135ஆவது இடத்திலிருக்கும் பெல்ஜியத்தின் ஸ்டீவ் டார்சிஸிடம் தோல்வி அடைந்தார். நடால், மிகப்பெரிய டென்னிஸ் தொடர்களில் முதல் சுற்றில் தோல்வி அடைந்து வெளியேறுவது இதுவே முதல் முறை.

2ஆவது சுற்றில் நடப்பு சம்பியன் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர், தரவரிசையில் 116ஆவது இடத்தில் உள்ள உக்ரைனின் செர்ஜியை எதிர்கொண்டார். இதில் முதல் செட்டை தன்வசப்படுத்திய பெடரர் 2ஆவது செட்டை பறிகொடுத்தார். இதனை யடுத்து தீர்க்கமான 3ஆவது செட்டில் ஆட்டம் கண்ட பெடரர் அதனை இழந்து அதிர்ச்சியளித்ததுடன் அடுத்த செட்டையும் கோட்டை விட்டு தொடரிலிருந்து வெளியேறினார். கடந்த 2002ஆம் ஆண்டுக்குப் பின், இரண்டாவது சுற்றுத் தொடரிலிருந்து வெளியேறுவது இதுவே முதல் முறையாகும்.

நடப்பு சம்பியனான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் நான்காவது சுற்றில் தோல்வியடைந்து வெளியேறினார். நம்பர்–1 வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ஜேர்மனியின் சபைன் லிசிக்கியை சந்தித்தார். முதல் செட்டை இழந்த செரினா, பின் எழுச்சி கண்டு 2ஆவது செட்டை கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் ஏமாற்றிய செரினா இறுதியில் தோல்வி அடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

முன்னதாக 2ஆவது சுற்றில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா– தரப்படுத்தலில் 131ஆவது இடத்திலுள்ள போர்த்துகலின் மிச்சல் லார்ச்சர் டி பிரிட்டோவை எதிர்கொண்டார். ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே தடுமாறிய ஷரபோவா பாதியில் இடுப்புப் பகுதியில் உபாதைக்குள்ளானதுடன் நேர் செட் கணக்கில் தோல்வியைச் சந்தித்து தொடரிலிருந்து வெளியேறினார்.



# உலகக் கிண்ண ஒத்திகையா?

2013ஆம் ஆண்டுக்கான கொன் ஃபிடரே ஷன் கிண்ணத்தை பிரேஸில் சுவீகரித்துக் கொண்டதை அடுத்து இப் போது உலக கிண்ணத்தின் மீதான அலை வீச ஆரம்பித்திருக்கிறது. 2010 ஆம் ஆண்டு உலக கிண்ணம் மற்றும் 2012 யூரோ கிண்ணம் ஆகியவற்றை கைப்பற்றிய ஸ்பெயின் அணியை வீழ்த்திய தன் மூலம் தான் மீண்டு வந்துள்ளதை நிரூபித்திருக்கிறது பிரேஸில். இந்த சாதனை வெற்றியானது கொஞ்சம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. காரணம், தற்போதைய நிலைப்பாட்டின் அடிப்படையில் உதைபந்தாட்ட அவதானிகளின் கருத்துக்களின்படி அடுத்த உலக கிண்ணத்தை வெற்றி கொள்ளும் அணி என்று கணிக்கப்படும் அணிகளில் முதன்மை பெறும் அணிகள் ஸ்பெயின் மற்றும் ஜேர்மன் அணிகளாக இருக் கின்றன.

இந்த நிலையில் கொன்ஃபிடரேஷன் கிண்ண இறுதிப் போட்டியில் ஸ்பெ யினை வீழ்த்தியதன் மூலம், ஸ்பெயின் மற்றும் உதை பந்தாட்ட ஜாம்பவான்களின் உலக கிண்ண கனவு தொடர்பான நிலைப்பாட் டில் பிரேஸில் விரிசலை ஏற்படுத்தியிருக் கிறது. இளம் வீரர்கள், சொந்த மண் என்று அடுத்த உலக கிண்ணத்தை குறி வைக் கும் நிலையில் பிரேஸில் இருந்தாலும் கூட ஸ்பெயினை வீழ்த்தியது மட்டுமே உலக கிண்ணத்தை வென்று விடுவதற்கான ஒரு தகுதியாக பிரேஸில் கருதிவிட முடி யாது. இறுதிப் போட்டியை வென்றாலும் கூட, அந்த சுற்றுப் போட்டி முழுதும் வீரர் களுக்கிடையான முழுமையான ஒத் துழைப்பு ஆட்டத்தை வெளிப்படுத்த தவறி யிருந்தது பிரேஸில்.

பிரேஸிலுடனான அதிர்ச்சி தோல்வி என்பது ஸ்பெயினுக்கு ஒரு பின்னடை வாக இருந்தாலும் அனுபவம் வீரர் கள், இளம் வீரர்கள் மற்றும் நேர்த்தி யாட்டம் என்பனவற்றை கொண்டு இயங்கும் ஸ்பெயின் அணி உலகக் கிண்ண ரேஸில் இருந்து துளியும் பின் வாங்கப் போவது இல்லை. இப்போதி லிருந்தே கவுண்டர் அட்டாக் ஆட்டங் களை தடுக்கும் வழிமுறைகளை ஆராய ஆரம்பித்திருக்கும் ஸ்பெயின்.

அது போல ஜேர்மன் அணி கூட, சொந்த மண்ணில் கிண்ணம் வெல் லும் பிரேஸிலின் கனவுகளில் கல்லை விட்டு எறியக்கூடிய ஒரு நேர்த்தியாக ஆட்டம் ஆடுகின்ற அணி. ஏனைய அணிகளைப் பார்த்தால், போர்த்துக் கல் : ரொனால் டோவை தவிர வேறும் யாரும் ஆடுவதாக தெரிய வில்லை, ஆர்ஜன்டினா : மெஸ்ஸி மட்டுமே தனியாளாக அணியை இழுக்க வேண்டியதாக இருக்கின்றது, இங்கிலாந்து : அநேக வீரர்கள் சிறப் பாக ஆடினாலும் இன்றைய திகதி வரை ஒரு சிறந்த குழு ஆட்டத்தை வெளிப் படுத்த தவறி வரும் அணி, இத்தாலி : கிழட்டு சிங்கங்களின் ஆட்டம் இளம் வீரர்களின் முன்னால் எடுபடுமா என்பது பலத்த சந்தேகம், நெதர்லாந்து : மிஞ்சிப் போனால் காலிறுதி வரை தான் தாங்கு வார்கள்.

ஆக மொத்தம் இந்த கொன் ஃபிட ரேஷன் கிண்ண வெற்றியின் மூலம் ஒரு உத்வேகத்தை பெற்றுள்ளது பிரேஸில். ஆனாலும், உலகக் கிண் ணத்தை வெல்லும் என்ற கணிப்பில் அனைத்து வல்லுநர்களின் கருத்தும் இன்னமும் ஜேர்மன், ஸ்பெயினாகவே இருக்கின்றது.

## விளையாட்டு

தொகுப்பு : வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்: ஜஸ்ரின்

# சேடமிழுக்கும் '13'

(சண்டேலீடரில் - மண்டன இஸ்மாயில் அபேவிக்கிரம எழுதியது..)




அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்வதற்காக முன் மொழியப்பட்ட திருத்தங்களுக்கு எதிராக அமைச்சரவையின் அமைச்சர்களுக்குள் எழுந்துள்ள மிக்க அளவிலான எதிர்ப்புகள் மற்றும் கருத்து வேறுபாடுகளை ராஜபக்ஷ அரசு அந்த முயற்சிகளைச் சற்றுத் தள்ளி வைத்துள்ளது.

ஜனாதிபதி ராஜபக்ஷ 13 ஆவது திருத்தத்தில் மேற்கொள்வதற்கென முன் மொழியப்பட்டுள்ள முக்கியமான இரு திருத்தங்கள் குறித்து ஆளும் தரப்பு நட்பு அணிகளிடம் அவரவர் கருத்துக்களைத் தெரிவிக்கும் படி கேட்டிருந்த நிலைமையில் இடது சாரிக் கட்சிகளான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் ஜனநாயக இடது சாரி முன்னணி ஆகியன ஒன்றிணை தமது நிலைப்பாடு தொடர்பில் சுருக்கமான அறிக்கை குறிப்பு ஒன்றினை அமைச்சரவைக்குக் கையளித்திருந்தன.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்றக் குழுவினர் ஏகமனதாகவே திருத்தங்களை எதிர்ப்பதற்கு முடிவு செய்துள்ளனர்.

அதே வேளையில் ஆளும் தரப்பிலுள்ள ஏனைய இரு கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஈ.பி.டி.பி ஆகியவற்றுடன் ஜனாதிபதி ஓர் சந்திப்பினை மேற் கொண்டார். ஜாதிக ஹெல உறுமய 13 ஆவது திருத்தத்தைச் செல்லுபடியற்றதாக்குவது தொடர்பில் விடாப்பிடியாகச் கடும் முயற்சி எடுத்து வருகின்றது. இருப்பினும் ஈ.பி.டி.பியினர் 13 ஆவது திருத்தம் நீத்துப் போகும் படி செய்யப்படக்கூடாதெனவும அத்துடன் மேற் கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் தமிழ் பேசும் மக்களின் விருப்பங்களுக்கு எதிராக இருக்கக் கூடாதெனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, திருத்தங்கள் நாடாளுமன்றில் நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும் போது அவரவர் மனச்சாட்சியின் படி வாக்களிக்குமாறு ஆளும் தரப்பு நட்பு அணியிலுள்ளோருக்கு ஜனாதிபதி இறுதியாக கூறியுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

அதேவேளையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவியானசோனியாகாந்தியுடன் அண்மையில் நடத்திய சந்திப்பும் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு ஆத்திரத்தை ஊட்டியுள்ளது.

தொண்டமான் அவரது இந்தியப் பயணத்தின் போது இந்திய மத்திய இணை அமைச்சரான வி.நாராயணசாமியினுடாக சோனியா காந்தியுடன் ஓர் சந்திப்புக்கான ஒழுங்கினைச் செய்திருந்தார். அச் சந்திப்பின் போது அவர் 13 ஆவது திருத்தத்திற்குத் தனது ஆதரவைச் சோனியா காந்திக்கு தெரிவித்ததாகவும் அத்துடன் சோனியா காந்தியின் கணவரும், முன்னாள் இந்தியப் பிரதமருமான ராஜீவ் காந்தியினால் கைச்சாத்திடப்பட்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி அமுலுக்கு வந்த 13 ஆவது திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகள் குறித்தும் தொண்டமான் அவரது அதிருப்தியை வெளிப்படுத்தியதாகவும் தெரியவந்துள்ளது.

இவைகள் குறித்து அறிந்த ஜனாதிபதி ஆத்திரமுற்று இருப்பதுடன் இன்னும் இது போன்ற அரசுக்கு எதிரான எண்ணப் போக்குடையவர்கள் மேலும் பலர் இருக்கக் கூடும் என்பதையும் உணர்ந்துள்ளார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனரட்ண நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் நகர்விற்கு எதிராகத் தெரிவித்த கருத்துக்களைக் காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றுள்ளன.

இறுதியாக இது குறித்து விரிவான விவாதங்களுக்காக இவற்றினை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்வைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அமைச்சரவைப் பேச்சாளரான ஹெகலிய ரம்புக்வெல நாடாளுமண்ற தெரிவுக்குழு குறிப்பிட்ட காலவரையறைக்குள் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் பற்றியும் மாகாணசபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்களை ஒதுக்கிடுவது குறித்தும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் என ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையும் சபையில் பெற்று விட முடியும் என்ற அவரது நம்பிக்கையினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அரசாங்கம் 19 ஆவது திருத்தத்தை முன்வைப்பதற்கான ஒழுங்குகளைத் தற்போது அவசரமாக மேற் கொண்டு வருவதாகத் தெரிகின்றது.

நாடாளுமன்றில் ராஜபக்ஷ அரசாங்கம் 161 ஆசனங்களைத் தன் வசம் கொண்டுள்ளது. அத்துடன் அரசியலமைப்புத் திருத்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு 150 வாக்குகள் தேவைப்படும். எனினும் தற்போது ஆளும் தரப்பினருக்குள் காணப்படும் 13 ஆவது திருத்தம் தொடர்பான கருத்து வேறுபாடுகளைத் தேவைப்படும் 150 வாக்குகளைப் அரசினால் பெற்றுக் கொள்ளமுடியுமா என்பது சந்தேகத்துக்குரிய தொன்றாகவே உள்ளது.

'13'ஐ நீக்கும் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும் பான்மையை அரசால் பெறமுடியாமற் போனால் ராஜபக்ஷ அரசாங்கம் ஓர் பொதுவாக் கெடுப்பினை நடத்த வேண்டும் எனக் கூறியிருந்தார். நாடாளுமன்றில் தமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருப்பதாகத் தம்பட்டம் அடித்துவரும் ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கும் இது சவாலாக அமைந்துள்ளது.

எது எப்படியிருப்பினும் செப்ரெம்பரில் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் எனத் தொடர்ச்சியாக ராஜபக்ஷ அளித்து வந்த வாக்குறுதிகளுக்கமைவாகத் தேர்தல் நடத்தப்படவேண்டுமானால் அது குறித்து உத்தியோக பூர்வமாக ஜீலை மாத முற்பகுதியிலோ அன்றி இறுதிக்குள்ளாகவோ அறிவிக்கப்படல்வேண்டும்

## இந்தியா ஆத்திரம்.

இந்தியாவினால் கொண்டு வரப்பட்ட இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக இத்தீவில் உள்ள ஒன்பது மாகாணங் களுக்கும் வழங்கப்பட்ட மிகக் குறைந்தளவிலான அதிகாரப்பகிர்வினைக்கூட வலுவிழக்கச் செய்யும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மறைமுகமான முயற்சிகளால் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ஆத்திர மடைந்துள்ளதா என்று ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன.

எது எப்படியாயினும் 13 ஆவது திருத்த விவகாரம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளில் இந்தியா மீண்டும் உள்நுழைவதற்கு ஓர் வாய்ப்பாகவே அமையும். இதனிடையில் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐ.நா.மனிதஉரிமைகள் சபையின் கூட்டத் தொடருக்கு முன்பதாக ஓகஸ்ட் மாதத்தில் ஐ.நா.மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வர முன்னர் ராஜபக்ஷ அரசாங்கம் வடமாகாண சபைத் தேர்தலுக்கான ஒழுங்குகளை விரைவாகச் செய்ய வேண்டும்.

அது போன்ற நல்லெண்ண நடவடிக்கைகளே நவம்பரில் கொழும்பில் நடத்தத்திட்டமிட்டுள்ளபொதுநலவாய நாடுகளின் தலைவர்களில் கூட்டத்தின் வெற்றியையும் தீர்மானிக்கும்.



noolaham.org | aavanaham.org

# உணவிலே கலைவண்ணம் கண்டவர்கள்





எல்லாத் துறைகளிலும் போட்டி அதிகரித்து விட்டது. அதனால் புதுப் புது உத்திகளைப் புகுத்தி தமது பக்கம் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கு ஒவ்வொருவரும் முயன்று கொண்டேயிருக்கிறார்கள். சமையல் கலையிலும் தமது கைவண்ணத்தைக் காட்டிய நிபுணர்கள் தம்மீதான ஈர்ப்பை அதிகரிப்பதற்காக அவற்றைக் கலை வண்ணங்களாக மாற்றுகிறார்கள். சாதாரணமாக சமையலுக்குப பயன்படுத்தப்படும் காய்கறிகள், பழங்கள் என்பவற்றை வைத்து அவர்கள் ஆக்கியுள்ள கலைவடிவங்களில் சில இங்கே பிரசுரமாகியுள்ளது.





# கருகிய 200 மில்லியன் டொலர்

ஒரே வினாடியில் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை கரியாக்கி உள்ளது ரஷ்யா. அண்மையில் கசகஸ்தானில் இருந்து விண்ணுக்கு ஏவப்பட்ட ரஷ்ய விண்கலம் புறப்பட்ட சில நொடித்துளிகளிலேயே கட்டுப்பாட்டில் இருந்து விலகி வெடித்துச் சிதறியுள்ளது. இதனால் ரஷ்யாவுக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது.







இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெருகும்பா பிளேஸ், [illegible] ரன்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2013 ஜூலை 10 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org